# படைப்பு

சமூகத்தின் இணைப்பு

## மின் இதழ்

பதிப்பு14



17/07/2017

மீசைக்கவிஞனின்
பூனைக்குட்டிகளெல்லாம்
பவ்யமானவை..

ஓரிரு மயிர்களுடன்
மீசையிருந்ததுபோல்
அவற்றின் வக்கிரங்களும்
ஒன்றிரண்டாகவே இருந்தன..

இன்றைய பூனைகள்
அவ்வாறு இல்லை..
அவற்றின் உடல்
ரோமங்களைப்போல்
வளர்ந்துவிட்டன வக்கிரங்கள்..

வெள்ளைப்பூனைகள்
தன் தோல்களால்
நிற வேறுபாட்டை
வேரூன்றியிருந்தன...

சாம்பல் நிறப்பூனைகளெல்லாம் சாதிக்கொலைகளின்
எரித்த
சாம்பல்களை தன் உடலில்
அப்பி நிறத்தை மேலும்
மெருகேற்றிக்கொணடன...

கருப்பு நிறப்பூனைகள்
எப்போதும் வங்கிககளிலும் பங்களாக்களிலும்
மறைமுகமாகவே முடங்கிக்கொண்டிருந்தன..

ஏனைய நிறப்பூனைகள்
சில காடுகளை அழித்து
அவ்விலைகளின் பச்சைகளை பூசிக்கொண்டன..

சிவப்பு நிறமும் அதுபோலாவே..
மதக்கலவரக்குருதிகளுடன்...

பலவண்ணங்கள்கொண்ட பூனைகளெல்லாம் நாட்டை
ஆண்டு பல குழிகளைப்பறித்துக் கொண்டிருந்தன..
அக்குழிகளெல்லாம் உண்மைகளைப்
புதைப்பதற்காகவே ஒழிய இயற்கை உபாதைகளுக்கென
தவறாக நினைத்துவிடாதீர்கள்..

மீசைக்கவிஞனின்
பூனைகளெல்லாம்
பாலைமட்டுமே குடித்தன...
இன்றைய பூனைகள்
இரத்தத்தை சப்புகொட்டிப்
பருகுகின்றன..

பாரதி மீண்டும் பிறவியெடுத்து
இக்கொடுமைகளை
காண நேரிட்டால் சற்றே
தள்ளி நில்லுங்கள்..

அவனின் உச்சகட்ட நிந்தனையான
காரி உமிழ்தலின் சாரல்களிலிருந்து தப்பித்துக்கொள்ள..

--- ஆனந்த்

ஆசைகளைக் கூட்டி
கனவுகளைப் பெருக்கி
சுயம்வகுத்து
வாழ்ந்திருப்போம்
இறுதியில்
பேதமின்றி
பெயரையும் கழித்துவிட்டு
பிணமாக்கி முடிக்கிறது
பெருமை மிகுந்த
மரணம்.

--- க. மகுடபதி

சாலையோரத்தில்
சாக்பீஸ் ஓவியம் வரையும்
கண்ணப்பனாரை,
நாங்கள்
வடபழனி வான்கோ என்போம்.
காலை முதல் மாலை வரை வரைபவர்,
தினம் ஈட்டும் பணத்தில் பகுதியை
ட்ராஃபிக் போலிஸிடம்
வழங்கிய பின்னரே வீட்டிற்கு செல்வார்.

அவர், தம் வீடு திரும்பா
மாலையொன்றில் தான்
செவ்வான மழை
அச்சாலையோரம் மட்டுமாய்
தரை இறங்கியது.
அதன் மறுநாள்,
அவ்விடத்தே
கை, கால்களை பரப்பியபடி
கண்ணப்பனாரும்
சாக்பீஸ் ஓவியமாய் வீற்றிருந்தார்.

அதற்கு சற்று தொலைவே
நிற்கும் ட்ராபிக் போலிஸ்,
கண்ணப்பனாரிடம்
தாம் வாழ்நாள் முழுவதுமாய்
வாங்க நினைத்த தொகையை
முகப்பு நெளிந்த மகிழுந்தோடு
தம் எதிரில் நிற்பவனிடம் கேட்க..
அவன் தம் வாழ்நாள் முழுவதும்
மதுவாய் குடித்துத்
தீர்க்க நினைத்த பணத்தை
கையிலெடுத்து எண்ணலானான்.

இவை யாதையும்
கண்டும் காணா வண்ணம்
கேட்டும் கேட்கா வண்ணம்
தமது ஒரு கண்ணையும்,
காதையும் மூடியபடி
நீலவானில் நடந்து சென்றன
வெண் சாக்பீஸ் ஓவியங்கள் சில.

--- ருத்ரன் ரிஷி

முன்னொரு காலத்தில்
என்னோடு பயணித்த
இரண்டு புறாக்கள் துணைதேடி
தங்கள் வழிகளில் பறந்து
விலகிப்போனார்கள்

அவ்வப்போது இளைப்பாற
என் கிளைகளில் அவையிரண்டும் தனித்தனியே
வந்தமர்ந்ததுண்டு

பத்து ஆண்டுகள் கழிந்த பின்னும்
இன்னும் அதே அல(ழு)கோடு
சிறகுகள் முழுதும் நேசம் சுமந்படி
வந்தடைத்தார்கள் என் கூட்டுக்குள்

சிலிர்த்து சிறகுலர்த்தி படபடத்து
இறையூட்டிய புறாக்கள்
தங்கள் அலகுகளால்
கொஞ்சம் கொத்தி மகிழ்ந்து
நீண்ட நேர அடைகாத்தலுக்குப் பின்
கனத்த இதயம் சுமந்து பறந்து போனார்கள்

அவை வந்துபோன நிமிடம் முதல்
இன்னும் பல பறத்தல்களுக்கு
என் சிறகுகளில் அப்பிக்கொண்டது
அன்பின் பிசுபிசுப்பு
இதோ என் வேர்களும் பூக்கத்தொடங்கிவிட்டன...!

--- தனபால் பவானி

காற்றில் ஆடும் வாழ்வின் கிளை
-----------------------------------
பசித்த வேட்கையில்
தொங்கும் நாவில் தொடர்ந்து
கசியும் உமிழ் நீருடன்
காத்துக்கொண்டிருக்கிறது ஓநாய்...
நனைந்த அணில் குஞ்சு உயிர்த்திருக்க
இறுகப் பற்றிய கிளை
வேகமாய் ஆடுகிறது காற்றில் ...
இரண்டிற்குமான மனத்தவிப்புடன்
பயணிக்கிறது வாழ்வின் முரண்கள்...
இரண்டிற்குமான கவனம் காற்றின்மீதே
அமர்ந்துகொண்டிருக்கிறது...
இழுத்து மூடி கொக்கிகள் மாட்டிய பின்னும்
அடித்துக்கொண்டேயிருக்கும்
பெருங்காற்றொன்று ஜன்னலைப்போல்
தடதத்துக்கிடக்கிறது அணில் குஞ்சின்
இதயத்துடிப்பு...
தொடுவானத்தின் மௌனத்தை
துணைக்கழைத்து அறை முழுக்க
மௌனத்தை ஒட்டிக்கொண்டதைப்போல்
இலக்கை நோக்கி மௌனித்திருக்கிறது ஓநாய்...
பாறைகளை இளக்கிக் கொண்டு திரியும் மேகங்கள்...
தூண்டிலிட்டு இழுக்கும்போது
நனைந்த துணிப்பொதியாய்
இரண்டின் பக்கமும் நகர மறுக்கிறது வெற்றி...
உயிர்த்திருத்தலுக்காக பசித்திருப்பதும்
பசி மறந்தாகிலும் உயிர்த்திருத்தலும்
ஓநாய்க்கும் அணிலுக்குமான
வாழ்தல் குறித்த
காத்திருப்பின் நிமிடங்களாகிறது.....
இரையாவதிலிருந்து தப்புவதும்
இரையாக்கிக்கொள்வதில் வெல்வதும் குறித்து
முடிவெடுக்கும் அதிகாரத்தின் பின்னே
ஓசைகளற்று படுத்திருக்கிறது
எச்சரிக்கையின் நிமிடங்கள்...
சந்தேகத்தை சுமந்துகொண்டு
அசைவுகளற்று கிடக்கும் நேரத்தில்...
இரண்டுக்குமான புது எதிரியின்
உருமல் சத்தம் கேட்டவுடன்
அனிச்சையாய் வெவ்வேறு திசைகளில்
தெறித்தோடுகின்றன இரண்டும்...
தப்பித்த நொடியின் வசந்தத்தை
இரண்டும் நுகர்ந்த பொழுதில்...
இருத்தலின் நிமித்தங்களை
காற்றில் ஆடியபடி
யாரிடமோ சொல்லிக்கொண்டிருக்கிறது
அணில் தப்பிய கிளை....

--- சந்துரு

ஒரு
இசை தேடிப்புறப்பட்டேன்
நகரவீதியில் சப்தங்கள் என்னை
பெருக்கித்தள்ளியது
இரைச்சல் அழுக்குகள்
துடைத்து எழுந்து நடக்கத் தொடங்கினேன்.
கடந்து போகும் சிலரிடம் இசையின்
முகவரி கேட்டு சுரமற்று போய் சென்ற திசையின்
கடைசியில் உடைந்த சாலையின்
இறங்கி நடக்க சில்லென்ற காற்று மேனியில்
பட எங்கிருந்தோ கேட்ட பறவையின் கீச்சிடுகளினூடே
ஆன்மாவின் சிறகுகள் விரிய என் பேரிசையின் வானம்
விரித்த
புல்லாங்குழலை எனதாக்கிக்கொள்ள
காணிநிலம் ஒன்று தேடினேன் அந்த கிராமத்தில்..!

--- க.ராஜகுமாரன்

வெயில் சூம்பி
முதிர்ந்து பழுத்து
வெம்பி சுருங்கிய
மாம்பழத்தை போலவே
கோணிப்பையின் கிழிசலில்
கிடத்தியிருந்தனர்...

தோரணங்களாய் கட்டி
அழகுப்பார்த்து மெலிந்த கயிற்றில்
தொங்கும் மாவிலையைப்போல
காய்ந்து கிடந்தது உசுரு...

நான்குமுழ வேட்டியொன்றில்
நாணத்தை இறுக்கி சுருட்டி
கோமியத்தையும் மனித சாணியையும் கழுவயாறின்றி
மொத்த தண்ணீரில்
முழுசாய் மூழ்கி எடுக்கப்பட்ட
நாய்க்குட்டியை போல
நாற்றத்தை கழுவியிருந்தனர்...

அங்காடியில் வாங்கிய
அரிசியில் குழைந்த தயிர்சாதத்தை
செங்கல் வைத்து சிமெண்ட்டை
பூசிய கலவைப்போல் பூசி
பாலாற்றில் புதைத்தால்
புண்ணியமென உயிரின் முன்
விவாத தர்க்கங்கள் நடைபெற்றன..

நட்டு வைத்ததற்காகவும்
வளத்துவிட்டதற்காகவும்
நீருற்றியதற்காகவும்
என்னால் இரவில் பிராணவாயு
விடமுடிவதேயில்லையென
கரியமில வாயுவையே
வெளிக்கொணர்த்திக்
கொண்டேயிருந்தது வேப்பமரம்...

மூச்சு மூச்சிறைத்துக்
கொண்டிருந்தது

--- ராம் பெரியசாமி

இல்லாத ஒன்றுக்குள்
ஏதோவொன்று இருக்கத்தான் செய்கிறது,
காட்சிப் பிழைகளில்
கடந்து போகிறான் மனிதன்,
ஆசைக் குளியல்
அவனுக்கு அதிகமாகப் பிடித்திருக்கிறது,
இருக்கின்ற உடலோடு வந்தவன்
இல்லாத ஒன்றாகத்தான்
முடிவுரையை எழுதுகிறான்,
காதலொன்று மட்டும் இல்லையென்றால்
அவன் கடந்து போகும் பாதை
முட்களால்தான் நிரம்பியிருக்கும்,
ஞானம் என்பதும் அவன் போடும் வேசம்,
காதல் மட்டும் ஞானமில்லாமல்
வேறு என்னவாக இருக்க முடியும்?
மதங்களுக்குள் நுழைந்து
பெரும் மாச்சரியம் பண்ணுகின்றான்,
கத்தியைத் தீட்டிக் கொண்டே
தன் கடவுளையே வெட்டுகின்றான்,
பிணங்கள்தானே வரலாற்றை எழுதுகின்றன,
நாளைய பிணங்கள்
இன்றைய வரலாறாக இருக்கவே முடியாது,
இல்லாத ஒன்றுக்குள்
ஏதோவொன்று இருக்கத்தான் செய்யும்...
இருப்பதாக நினைப்பதெல்லாம் கூட
இல்லாத ஒன்றாகவும் இருக்கும்...

--- முகமதுபாட்சா

சீனு பையா
-------------

பாப்னுமண்டல் என்ற பெயருக்கு
உடனடித் தமிழ் பெயர் சீனு.

ஹவுரா விரைவு ரயில்
சீனுவை ஒடிஸாவிலிருந்து
சென்னைக்கு ஏற்றிவந்திருக்கிறது.

மேன்சனில் எனக்கான சிறுதேவைகள்
ஏதுமில்லாத போதும்
சீனு தவறாது என்அறைக்கு வந்துபோவான்.

கிழமைகளின் பெருந்துயர்கள் தாங்கும்
வலிமையற்ற அவனிடமே
வீடு செல்ல அனுமதிக்கப்படாத
என் ஞாயிற்றுக்கிழமைகள்
சிலவற்றை விட்டுவைத்திருக்கிறேன்.

பின்னிரவுகளில் ஒடிஸாவின் திசையில் பறக்கும்
விமானத்தின் கீழ்
உறவுகளின் குரல் நினைவுகளோடு
கைபேசியில் வாழப்பழகியிருந்தான்.

இடம்பெயர்தலின் வலிகளை
காகிதப் பணம் தனது அத்தனை கைகளோடும்
மறைக்க முயற்சித்துக்கொண்டிருந்தது.

குரல் நினைவுகளும் சாத்தியமற்ற 70களில்
தாதர் விரைவு ரயில்
எதிர்வீட்டுக் கனகராசு அண்ணனை
பம்பாய்க்கு ஏற்றிக்கொண்டு போனபோது
அவருக்குப் பத்து வயது
எனக்கு ஐந்து.

--- ஆண்டன் பெனி

பாடுமீன்கள்
-------------

விழிப்புக்குள் செறியும்
நெடுநாள் உறக்கம்
விரகத்தின் சிறைக்கைதி
இமைக்கும் துடிப்புகளுக்கு
இதயசந்தம் கோர்த்துக்கொள்ளும்
இரவின் பாடுமீன்கள்
இரவல் நாழிகைகளின்
நாட்குறிப்பில் நனையும்
நாற்காலிச்சுமை நான்
காகிதப்படகிற்கு மின்விசிறியின்
விசையும் திசையும் ஊடறுத்து
மோதிக்கொள்ளும்
விரல் வழி வரையும்
மேசையில் சிந்திய
நீர்க்கோலம் பூத்துக்கிடக்கும்
ஓர் மௌனத்தின் நீட்சியில்
அந்தகாரமும் அந்தக் கடிகாரமும்
அடிக்கடி துடித்துக்கொள்ளும்..
மெல்லிசையில்லா மெய்யொலியில்
கரையும் குவளை
முகாரியில் குவிந்துகொள்ளும்
அதுவே இரவின் இரகசியம்

--- மின் ஹா (மின்மினி)

துடிக்கவிட்டே வாழ்கிறான்
மனிதன்
இதயம்!

வாழ்வை வெட்டி
வாழ்த்துச் சொல்லினர்
வாழைமரம்!

--- மதி

அது எப்பொழுதும் வரும் மாலையிலயே வருகிறது சற்று தாமதமாக

நானும் எப்பொழுதும் போல்
காத்திருக்கிறேன் அதிசீக்கிரமாக

தாமதத்தின் கோவம் அறியாததவையாக முன்னும்
பின்னும் அசைத்துப் பார்க்கிறது எனை

நான் கண்டுகொள்ளாத போதும் விடுவதாயில்லை அது

அது நிழலை படரவிடுகிறது என்னில்
கொஞ்சம் குளிர்ச்சியாகவும்
கொஞ்சம் இதமாகவும்

என் மடியில் தலைசாய்கிறது
ஒவ்வொரு விரலிடுக்குளின் இடையிலும் காதலை
நிரப்புகிறது

கண்ணங்கள் வருடி
தலை கோதி
வெட்கங்களை சீண்டி பார்கிறது

எதற்கும் மசியாத என்னிடம் மழையைத் தூவிவிட்டு
மறைந்து கொள்கிறது
கைக்கு எட்டாத தூரத்தில்
மேகத்துள் நிலவாக அது...

--- நிவிகா மித்ரை

மீனுக்குத் தூண்டிலிட
காணக் கிடைக்கிறது
உயிரின் துடிதுடிப்பு

--- முகில் வேந்தன்

வாடும் பயிரைக் கண்டபோதெல்லாம்
--------------------------------------
பசுமையின் பரிணாமங்கள்
இங்கே கானலாய்...
கருச்சிதைவாய்.....!
கிழிந்த பசுஞ்சேலையின்
நூலிழை நெகிழ்வுகளாய்
வயலிடைப் பயிர்களின்
வனப்பிழந்த நெருடல்கள்..!
பசுமை பறிபோன வறட்சியில்
தாம்புக் கயிற்றின் தூர ஆரங்களோடு
மாடுகளுக்கும் எங்களுக்குமான
அன்னியோன்யச் சமன்பாடுகள்
வயலின் பரப்பளவுக்குள்ளேயே
முடிந்துவிடுகிறது வெறுமையாய்....
வேறு தொழிலேதும் தெரியாமல்
பயிர்களைப் பார்த்து
வாடி வாடியே வள்ளலாராகி
மரண சோதிக்குள்
ஐக்கியமாகிப் போகிறோம் நாங்கள்..!

--- க.அர.இராசேந்திரன்

எவ்வளவு முயன்றாலும்
உங்களால் இயலாது
அவனது புன்னகையை மறைக்கவோ
அவனது சிரிப்பை ஒளிக்கவோ
அவனது மகிழ்ச்சியைப் பறிக்கவோ
ஏனெனில் அவன்
மனத்திற்குள் புன்னகைப்பவன்
மனத்திற்குள் சிரிப்பவன்
மனத்திற்குள் மகிழ்பவன்
அவன் மனத்தின் சாவியை
அடையவே இயலாது
உங்களால் ஒருக்காலும் .

--- சுப்ரா

## மரம், கனி மற்றும் அது

------------------------

மாலை நிழல்களைப் போல
இருவரின்
காத்திருப்பின் தருணங்களும்
நீண்டு கொண்டே போகிறது.

துளியும் தயக்கம் இல்லாத
குழந்தைகளின்
நிர்வாண அங்கீகாரத்தில்
கைகளைக் கோர்த்துக் கொண்டு
வனத்தில் வலம் வந்த
ஆதாமும் ஏவாளும்
இரவின் முகவரிக் காலங்களில்
ஆகக் கூடிய மட்டும்
தங்களுக்கான இடைவெளிகளை
விலக்க முயல்கிறார்கள்.

துளியும் முன்னேற்பாடில்லாத
வெகு இயல்பான பாவனையில்
அவர்கள் கண்கள் மட்டும்
பொய்யாக அபினயிக்க
தரையிறங்குகிறது
எதிர் பார்ப்பின் தருணங்கள்
புறவெளியைத் தீண்டிய
ஒரு பறவையைப் போல.

நேரம் கடந்து போக
இருவரின் தயக்கமான
முன் மொழிதலை புறக்கணித்தவாறு
தொடர் முத்தங்களின்
பரிவர்த்தனையில்
அரங்கேற்றிக்கொள்கிறது
அவர்களுக்கான காமம்
வெகு அனிச்சையாக.

--- பிரேம பிரபா

## செவிலித்தாய்

----------------

இரவு முழுக்க பிரசவ வலியில்
அலறிய என்னை
அம்மாவைவிட அவள்தான்
அதிகம் பொறுத்துக்கொண்டாள்

ஆபரேஷன் என்று முடிவானதும்
கண்ணீர் துடைத்து
தைரியம் கூறி
உடைமாற்றிவிட்டாள்

மயக்க மருந்து கொடுப்பதற்கு முன்னால்
அவளையேதான் நான் பார்த்துக்கொண்டிருந்தேன்

எப்போது கண் விழித்தேன்
என தெரியவில்லை
அருகிலேயே தூங்கி விழுந்துகொண்டிருந்தாள்

காப்பி தந்தாள்
சின்னப் பஞ்செடுத்து
உடம்பு நோகாவண்ணம்
ஒற்றி எடுத்தாள்
கிழித்த காயம் ஆறிவிடத் தேற்றினாள்

ஒரு வாரம் கழிந்த பின்னர்
போய் வருகிறேன் என்ற என்னிடம் கண்ணீர்
மல்கினாள்

ஒருமுறையாவது
சொல்லிவிட வேண்டும்
குழந்தைக்கு அவள் பெயரைத்தான் வைத்திருக்கிறேன்
என்று

--- அகதா

என்னிடம்.....
ஒரு வெற்றுக் காகிதம் இருந்தது.
அதில் நான்... சில கோடுகளை வரைந்து...
இன்னொருத்தனிடம் கொடுத்தேன்.
அதில் அவன்.... சில வட்டங்களை வரைந்து...
அருகிலிருப்பவனிடம் கொடுத்தான்.
அந்த மனிதன்...
வட்டங்களையும் கோடுகளையும் இணைத்து...
உருவமொன்றை வரைந்தான்.
இன்னொருத்தன் அதைப் பிடுங்கி...
வண்ணங்களால் நிரப்பினான்.
அவனிடமிருந்து அதை வாங்கிய...
இன்னொருத்தன்...
சில திருத்தங்கள் செய்து...
மேலும் செம்மைப் படுத்தி....
அடியில் கையொப்பமிட்டான்.
வெற்றுக் காகிதத்தில் வரைந்த கோடுகள்..
ஓவியமாக உருமாறுவது போலத்தான்..
நீங்கள் எதேச்சையாகப்... பேசி விட்டுப் போகும்..
வார்த்தைகளும்... காலத்துக்குக் காலம்....
மாறுதலடைகின்றன.
அதை யாரோ கேட்கிறார்கள்.
பிறகு... யாருக்கோ சொல்கிறார்கள்.
அதற்கு கண் காது மூக்கு வைத்து...
அவர்கள்... வேறு சிலரிடம் சொல்வார்கள்.
இப்படியாக... தலைமுறை தலைமுறையாக...
அவரவர் கற்பனைக்கேற்ப...
வார்த்தைகள் மெருகேற்றப்படும்.
பிறகு அவையெல்லாம்.... வரலாறாக்கப் படும்.
நான் ஓவியத்தில் இருந்து...
கோடுகளைப் பிரித்தெடுக்கப் போகிறேன்.
நீங்கள்.. உங்கள் வரலாற்றிலிருந்து...
உண்மையைப் பிரித்தெடுத்துக் கொள்ளுங்கள்.

--- ரூபன்

புலரிகிரகணமாகி மேவுகிறேன்
நம் முத்தங்கள் சொட்டுகின்றன
இலைத்துளிகளாய்
ஆம் நீ முத்தக்காடு

உன் சங்குகளும் கிளிஞ்சல்களும்
முத்த ஓசையாய் இசைகின்றன
என் உதட்டுக்கரையில் கரையொதுங்கி
ஆம் நீ முத்தக்கடல்

உன் வெளியில் பிரக்ஞை உணர்ந்தேன்
நம் முத்தஅலகுகள் பிரியும்போது
ஆம் நீ முத்தவானம்

உன் ஜீவனின் ஆழத்திலே
முத்தமிட வரம்பெற்றேன்
கூழாங்கற்களாகி
ஆம் நீ முத்தநதி

காலத்தில் முத்தமாகவே வாழ்கிறோம்
முத்தமிட்டபடியேதான் முடிவோம்
ஆம் நாம் முத்தக்கணம்

--- அன்பில்பிரியன்

இயற்கை
-----------

ஏசி இல்லா ஏழை வீட்டில்
தானாய் நுழைந்து
ஆரத்தழுவி
ஆசி பெற்று
வீசிக் கொண்டிருக்கிறது
காற்று.

--- பாலாமிர்தன்

முதலில் ஒரு வட்டத்தை வரைந்தவன்
இருப்பவர்களிலேயே பெரியவன்
மூக்கை உறிஞ்சிக் கொண்டு ஒருவன்
இறங்கும் கால் சட்டையை ஒரு கையால்
அவ்வப்போது இழுத்து விட்டுக்கொண்டு நிற்கிறவன்
ஒருவன்
மரத்தினடியில் வேடிக்கை பார்த்தபடி
சப்பாணியாக ஒருவன்..
கொஞ்சம் கொஞ்சமாக
அவர்களது சிறிய கும்பலில்
ஒவ்வொருவர் கையிலும் பளபளக்கும்
பம்பரங்கள்...சாட்டை கயிறுகள்..

இதோ ஆட்டம் ஆரம்பிக்கின்றது.. வட்டக்குத்து..
பம்பரத்தை இழுத்து சுழலவிட்டு
தலையாட்டி சாய வைக்கிறார்கள் ..
அமுக்கு, சாட்டையடி, பழம்,
மட்டை , மட்டையடி
ஓயாக்கட்டை, உடைத்தகட்டை என்று விதவிதமாய்
எல்லோரும் விளையாடி முடிந்த பின்
உள்ளே மாட்டிக்கொண்ட பம்பரங்கள் மீது
ஓங்கி தங்களது பம்பரங்களால் குத்தி சுழலவிட்டு
வெளியே தள்ளிக் கொண்டிருக்கிறார்கள் ..

மீண்டும் ஆட்டம் புதிதாக துவங்குகிறது
ஒவ்வொரு முறையும் ஒவ்வொருவர் பம்பரம்
உடைபட்டுக் கொண்டே இருக்கிறது
மாலை மங்கும் நேரம் வரை தொடரும்
இந்த ஆட்டத்தின் முடிவில்
சூப்பர் என்று தங்களை பற்றி நினைத்துக்
கொண்டிருந்த கொய்யாக் கட்டைகளாலும்
கருவேலங்கட்டையாலும் செய்திருந்த
எல்லா பம்பரங்களுமே
உடைந்து விடுகின்றன..
உடையும் நேரம் வரும்போது..

முதலில் வட்டம் போட்டவன் மட்டும் ..
உடையாத தனது பம்பரத்தை
எடுத்துக் கொண்டு
வெற்றி களிப்போடு சிரிக்கிறான்..

அவன்..தான்
இருப்பவர்களிலேயே
பெரியவன்!

--- கருணாநிதி ஷண்முகம் (கருணா)

நிலாவைக் காட்டிச்
சொல்லிவிட ஏராளக் கதைகளிருக்கிறது...
மாமன் மகள் திருமணம்
நிச்சயிக்கப்பட்டது தொடங்கி
இட்ட தென்னை
பாளைவிட்டது...
அக்கா பிள்ளையொருவன்
தகுதித் தேர்வில் தேறியது...
அலைவீச்சில் சங்கு கழுவி
காற்றொலியை ரசித்த மகளின் அழகு...
பால்யகாலத் தோழனை
பயணங்களினூடாகச் சந்தித்தது....
முன்னாள் காதலி
வாக்குத் தவறாமல் எங்களிருவரின்
பெயரின் முதலெழுத்தைத்
தன் பிள்ளைக்குப் பெயராக்கியது....
இப்படியாக நிலாவைக்காட்டிச்
சொல்லிவிட ஏராளக் கதைகளிருந்தும்
சொல்லாமல் கடந்துவிட்ட
பொழுதில்
ஒருவாய்ச் சோறாவது ஊட்டிவிட்டிருக்கலாம்
அம்மாவிற்கு.....!!

--- கட்டாரி

தாம் படைக்கா ஓர் நிலத்தின்
ஈரக் கசிவின் நுண்மை கண்டு
வெதும்பிக் கண்ணீர் வடிக்கும்
கடவுளை..,

உருவாக்க முடியா செயல் திறத்தின்
கூர்மையில் தானே உருவான இயந்திரத்தின்
அறிவைக் கண்டு மீ மயக்கம்
கொள்ளும் கடவுளை..,

அழகில் பிசிறு தட்டா சர்வ லட்சணமும்
ஒருங்கே பெற்ற வாளிப்பான
பெண் அணங்கை உருவாக்க
இயலாமல் இட உள்ளங்கையில்
வலது முஷ்டியால் பற்கடித்து
குத்திக்கொள்ளும் கடவுளை..,

படைப்பவன் இல்லையென
இயற்கையை வழிபடும் பெருங்கூட்டத்தின்
ஆரவாரத்தை செவியுறுங்காலந் தோறும்
ஒன்றோடொன்று தேயுமாறு
பற்களை நறநறக்கும்
கடவுளை..,

தேவனாகிப் புல் வரை பதினான்கடுக்கையும்
கீழிருந்து மேலாய் வரிசைக்கிரமத்தைக்
கலைத்து இஷ்டத்திற்கு விளையாடுகையில்
டார்வின் குரங்கொன்று இளிப்பதை
காணச் சகியாமல் தலை குனியும்
கடவுளை..,

கனத்த மீசை கொண்ட நீட்சே தனது
வீட்டின் நடுக் கூடத்தில் ஒருக்களித்து
படுக்க வைத்து கை விரல் நுனியில்
கீறி 'கடவுளை கொன்றவன் யாரெனத்
தெரியவில்லை, ஆயினும் அவன் இறந்து போய்
விட்டான், மஞ்சள் நிறத்தில் அவனது
குருதி வழிவதைப் பார்' என தொட்டு நக்கிச்
சிரித்தபடி கண்ணடிக்கிறான்.

--- ஹேமா

நீ போதும் போதுமென
ஓதும் அளவிற்கு
சேமித்து வைத்திருக்கிறேன்
முத்தங்களை
முத்தக்கிடங்காய்..!

எதில் தொடங்கினாலும்
இறுதியில்
உன் முடிவுரையென்னவோ
முத்தத்தில்தான்..!

ஊடலுக்கு
முற்றுப்புள்ளியென
முத்தத்தை
வைத்துவிட்டு
கூடலுக்கு
பிள்ளையார்
சுழி போடுகிறாய் நீ..!

முத்தம் முத்தமென
மொத்தத்தையும்
எழுதிவிட்டேன்
சத்தமில்லாமல்
வழியனுப்பிவிட்டுப்போ..!
எப்பொழுதும்போல
ஒரு பறக்கும் முத்தத்தை..!

--- நிவேதா_சுப்பிரமணியம்

கவச குண்டலத்திற்கு
பதில் அழுக்கு பனியன்
தங்க கீரிடத்திற்கு பதில்
சடை கண்ட அழுக்கு தலை
புரவி பூட்டிய தேருக்கு பதிலாய்
மரப்பலகை நான்கு சக்கரம்
தின்ன வைத்திருந்த
நான்காவது பொறையையும்
திட்டி கொண்டே
அந்த சொறி கண்ட நாயிற்கு
கொடை கொடுத்தபின்
சூம்பி போன கால்களை மடக்கி வைத்து
கைகளில் உந்தி தள்ளி
பலகையை உருட்டியபடி
கும்பலில் கலந்தே விட்டான்
ஏதோவொரு குந்திக்கு பிறந்த கர்ணன்....

--- கோ. ஸ்ரீதரன்

இரவின் மடியில்
---------------------
நிலவின் கிரணங்கள்
மெல்ல மெல்ல நகர்ந்து
படுக்கையின் விளிம்பில் நிற்கின்றன.
இருதயத் துடிப்பைப் போல்
சுவர் கடிகார ஓசை.
இரவின் அமைதியில் ஜரிகையாய் மின்னுகிறது
ஒரு குழந்தையின் அழுகுரல்.
தெருவில் குலைக்கும் நாய்க்கு பதிலைப் போல்
கர்ரென உருமி தானும் குலைக்கும் கடிகாரம்.
விளக்கைப் போட திடுமென வெடிக்கும் வெளிச்சத்தில்
திகைத்து பின்னும் இரையும் சில்வண்டுகள்.
புறக்கணிக்கப்பட்ட மனதைப் போல
கண்கள் வலிக்கின்றன.
வரவில்லை இன்னும் உறக்கம்

--- ஜி.சிவக்குமார்

இறந்த
வண்ணத்துப் பூச்சியின்
இறகொன்று வந்தது
காற்றில் மிதந்து!

கூடவே
வண்ண வண்ண மலர்களின்
குளுமையும்
மனதை நிரப்பும்
அவற்றின்
வாசமும்
சிற்றோடைகளின்
சலசலப்பும்..

பிரபஞ்ச வெளியெங்கும்
அதைச்
சந்தோஷமாய்ச்
சுமந்து திரிந்த
செல்லத்
தென்றலின்
சிலுசிலுப்பும்...

விழிகள் விரிய
கண்டு
குதூகலித்த
குழந்தைகளின்
பரவசங்களும்....
நிறைந்த
உயிர்ப்புடன் கூடிய
அதன்
கடந்த காலமும்!

--- வளவன் கரிகாலன்

இன்று எப்படியும்
அப்பறவைகளின்
சாதி, மதம் அறிந்துவிடும்
தீர்க்கமான முடிவுடன்
நெடுநேரமாய் காத்திருக்கிறேன்

வெள்ளை, பழுப்பு, சாம்பல், கருப்பென
பாரதியின் சிந்தனையாய்
பரவி பறந்துக்கொண்டிருக்கின்றன அவை

திடீரென தாழ்வாய் பறந்த ஒரு பறவை
எனதருகே வந்தமர்கிறது

உற்சாகமாய் அதனிடம்
பேச்சுக் கொடுக்கிறேன்

ஏதேதோ பேசிவிட்டு
அதன் சாதி யாதென வினவுகிறேன்

சாதியென்றால் யாதென
எதிர் வினா தொடுக்கிறது
அப்பழுப்புநிற பறவை

விலாவாரியாக விளக்கி
விடை நோக்கி காத்திருக்கிறேன்

'ஐந்தறிவுக்கொண்ட பறவை என்னிடம்
ஏது சாதி...?
அவ்வளவு பகுத்தறிவு
எங்கள் இனத்திடம் இல்லை' யென
பறந்து சென்று மற்ற பறவைகளுடன்
சேர்ந்து கொண்டது

எவ்வளவு முயன்றும்
என்னிடம் பேசிய பறவையை
என்னால் அடையாளம் காணமுடியவில்லை

அனைத்தும்
பறவைகளாக மட்டுமே தெரிந்தன

--- சசி சிவதாசன்

வட்டமடிப்பதின் அழகியல்காட்சியை
அண்ணாந்து பார்க்கும்
சிறகுகளற்றவன்

பரவையின் சுழலில் எதிர்த்து
கடப்பவைகளின் ஆனந்தத்தை
கரையோரத்தில் நின்று பார்க்கும்
துடுப்பில்லாதவன்

பரவையின் மேல் சிறகிழந்த பறவையும்
மூழ்கிப்போவதை போல்,

நம்மில் சிலரும்
இப்படி ஒன்றுக்கொன்று
ஆயிரம் ஆயிரம் இல்லாதவர்கள்
இருப்பவர்களின் செயலை ரசித்து
தம் இருப்பை தொலைந்தோடுகிறார்கள்.

சில சிற்றியல் திறன்களை
சேமித்த குடுவைகளில்
வைத்து மறந்ததை
உடைத்து எண்ணிப்பாருங்கள்.

உங்களுக்கான சாவிகள்
யாரிடத்திலும் இல்லை.

--- அ.சு.ரா

நான்
-----
இதில்
நான் என்பது நானல்ல
நீங்களும்தான்.
நானின் கண்கள் வடிப்பது
உங்கள் கண்ணீரைத்தான்.
எனது நானின் வேதனை
உங்கள் வலியின் நீட்சி,

எனது நான்
உங்கள் இருண்ட பிரதேசங்களில்
சுதந்திரமாய் உலவுகிறது.
உங்கள் வன்மத்தை
காயம்பட தழுவிக்கொள்கிறது.
துரோகத் தருணங்களில்
உங்கள் நியாயப்பாட்டிற்காக
பழிசுமக்கிறது.
உங்கள் மறதியை மீட்டெடுக்கும் போது
கடுங்கோபத்தை
ஏவுகிறீர்கள்.
உங்கள் குற்றங்களை
மறைக்கும்போது
எனது நாநயத்தை மெச்சுகிறீர்கள்.

மறுக்கப்பட்டக் கூடங்களில்
நீங்கள்
அத்துமீறும்போது
உங்கள் முன்
ஒரு நிலைக்கண்ணாடியைப்
பரப்புகிறது எனது நான்.
அப்போது
வெட்கப்படாமல்
சுட்டுவிரல் நீட்டி
பிம்பத்தில் தெரியும் உங்களை
'நான்' என்கிறீர்கள்.
என்ன செய்ய
உங்களுடன் நின்றுகொண்டு
நானும்
சுட்டுவிரல் நீட்டுகிறேன்.

நான் என்பதுதான்
நானில்லையே!!

--- குறிஞ்சி நாடன்

போதி விற்பனை
----------------------
சாக்கியமுனியை சந்திக்கச்சென்றேன்
அழகான ஆடையணிந்தேன்
சிகைவாரி ஆபரணமுமணிந்தேன்
வகைவாரியாக முந்திச்செல்லவேண்டி
மகிழ்வு உந்திற்சென்றேன்
அழைப்புமணியை தேடும்போது
கவனித்தேன் கதவில்லையென்று
கால் அணிகழட்டி உறையுடனே
கவனமாய் நடந்தேன்
இறையடையாள தலையொளியின்றியே
இருந்தவர் அழைத்தார்
என்னை பற்றிச்சொன்னேன்
சந்திக்கும் ஆசை பற்றியுந்தான்
காரணங்கேட்க கருத்தாய்
உரைத்தேன் கணிசமாய்
குறைந்த எந்தொழில் சிறக்க
சிரித்தபடியே சொன்னார்
சித்தார்த்தனும் புத்தனும் சந்தித்தகதை
புரிந்ததென்று புறப்பட்டேன் இனி
புதியதொழில் போதிமரம் விற்பதே.

--- வினோத்குமார்_பா

மரம் பூக்கவில்லை எனும்
கவலை நிலத்திற்கும் எனக்கும்..!

மொட்டு வைத்தது மரம்....,

தொட்டு விடாமல் கேட்டேன்...
"உன்னுள் உள்ள மலரின் இதழ்கள்
செல்லும் இடம் எதுவாக
உனக்கு விருப்பம்- .......?

ஆலயங்களினுள்ளா ?"

===கருவறைக்குள்ளும்
கற்பை களங்கப்படுத்தும் செயலை
தண்டிக்காத சிலைகளுக்கு நான் எதற்கு...?
மொட்டு முழங்கியது...

"எந்தத் தலைவரின் கழுத்துக்காய்
உன் காத்திருப்பு.? "
===ஊழலுக்கு தலை நுழைத்து
===வாரிசுகளுக்கு நாடளிக்கும்
===வரலாற்றுப் பிழைகளுக்கு நானா..! ?
சீறியது மொட்டு!!!

"கூந்தல்களில் குடியேற
கொள்கை முடிவு உண்டோ...?"
===பூவைப்பதும் பொட்டிடுவதும்
===கூந்தல் முடிப்பதும்
===அடிமை அடையாளங்களென
ஆர்பரிப்போருக்கு நானா ...!! ?
அரற்றியது மொட்டு!!!

"பின் எங்குதான் உன் மலர்தல்..?"
வியர்த்துக் கேட்டேன்...

இனங்காக்க இன்னுயிர் இழந்தோரின்
இடுகாட்டு பயணத்திற்கு... !

வாழ்நில உரிமைக்கு உடலடிப்பட்ட
வாலிபங்களின் வலி ஒத்தடத்திற்கு...... !

உழைப்போர் உயர
குரலும் விரலும் நீட்டி மரித்த
குமுகாய பொறுப்பு நிறை
எழுத்துக்களுக்கு ... !

அல்லாவிடின்
மலரவே மனமின்றி
வேருக்குத் தீனியாகவே....!!!!

--- அகன்

கலெக்டர் ஆபிஸ் வாசலில்
அந்த கரும்புச்சாறு கடையில்
இப்போதும் இருக்கிறது
இரட்டை குவளை முறை.
ஏழு ரூபாய்க்கு
கண்ணாடித் தம்பளரிலும்
எட்டு ரூபாய்க்கு
காகிதத் தம்பளிலும்
தளும்பத் தளும்பதருகிறார்கள்.இரண்டிலுமேஉழைப்பின்
பிசுபிசுஒட்டியிருப்பதால்
அதைதீண்டாமல்
பருகுவதே
ஒரு பாவச் செயல்.

--- சேலம்சீனிவாசன்

குடைவிரித்தல்

----------------------

ஒரு மழை நாளில்
அவனும் குடை விரித்து நிற்கின்றான்
கருப்பு நிறத்தில்
குடைகளுக்கான
எல்லா அடையாளங்களுடன்
தானிருந்தது
அவனதுகுடை
அதன் முனை
உச்சியை நோக்கி
உயர்ந்து நின்ற மாதிரி இருந்தது
குடைவிரித்த வண்ணமே
நிற்கின்றான் அவன்
கடந்து சென்ற
பாதசாரிகளின் கவனம்
சில நொடிகள்
களவாடப்பட்டு மீட்க்ப்படுகிறது
அவன் நின்று கொண்டிருந்த
சாலையை கூட நிராகரித்து
செல்கின்றன
சில வாகனங்கள்...
சில சந்தேகங்களும்
தயக்கங்களும்
சில கைவிரிப்புக்ளும்
அவனை நனையவிட்டு நகர்ந்தன
சாலையோரம் குடைபிடித்த
சில கருப்புக் காளான்கள்
நகைத்தன
அப்போது தான் அது நிகழ்ந்தது
அவர் கைளில்
கவர்ச்சியாய் மடிக்கபட்ட
சில குடைகளுடன் வந்தார்
குடைக்காரன் என்று அவர்
அடையாளம் கற்பிக்ப்பட்டிருந்தார்
அவருக்காக காத்திருந்தவர்கள்
குடைகளை விரித்தபடி
அகல்கிறார்கள்
அவரது கைகளில் எஞ்சியிருந்த
கருப்புக் கைக்குட்டையை
குடையா என்று
விசாரித்தனர் சிலர்
அவனோ அகலாமல்
குடைவிரித்த வண்ணமே காத்துக்கொண்டிருக்கிறான்
தனிமை
அவனை முழுவதுமாக
நனைத்துக் கொண்டிருந்தது.

--- நிலாரவி

சிதிலமடைந்த வீட்டின்
இடிபாடுகளுக்குள் சிக்கி கிடக்கின்றன
மீட்காத நினைவுகள்

பறக்கும் முன்பே சிறகடிக்கிகின்றன
காற்றில்
வெள்ளை காகிதங்கள்

சாம்பலாகி உதிர்ந்து கிடக்கிகிறது
காலம் உறிஞ்சிப் போட்ட சிகரெட்

இந்த தென்னங்கீற்றின் நுனியில்
சுருண்டிருக்கும் பச்சைப் புழு
எங்கிருக்குமோ நாளை

நட்ட நடுநிசியில் கொஞ்சம்
புரண்டு படுக்கின்றன
ஞாபகங்கள்

--- தங்கேஸ்

விலை மகள்
-------------

நிர்வாணம்
வசீகரிக்கும் மார்புகள்
கட்டுமான உடல்
பூசும் உதட்டுச்சாயம்
பட்டாம்பூச்சியாய் படபடக்கும் விழிகள்
பார்க்கும் ஆடவனின் கிளர்ச்சியை
தூண்டில் போடும் என் மூலதனங்கள்!

முதன்முதலில்
உணர்வோடு புணர்ந்துபோன
காதலனின் உடல் மட்டுமே
எனது கிளர்ச்சியை உயிர்பித்தது!

எத்தனையோ பேர்
வன்புணர்வில் மறத்துப்போன
உணர்வுகளில் செத்துப்போனது
எனக்கான கிளர்ச்சிகள்
வனப்பான உடலில் மறத்துப்போன
உடலை வெறித்தனமாய்
ஆசைகளை தீர்த்துவிட்டு
கேட்டுப்போகிறார்கள்
எப்படி வந்தாய் இத்தொழிக்கு
என்று விலை மகன்கள்!

என்ன செய்வது
யோக்கியம் மறந்து
பசியை மட்டுமே தீர்ததுக்கொள்வதாய்
என் நிர்வாணத்தை
அணைத்துப்போகிறார்கள்!

வெறியோடு கன்னங்களில் அறைபவனும்
நகங்களில் கீறுபவனும்
மூர்க்கத்தோடு புணரும்போது
கிழிக்கப்பட்ட ஆடைகளில்
அம்மணமே நிரந்தரமாக்கப்படுகிறது!

கிளர்சியடையவில்லை என்றால்
கன்னத்தில் அறைகிறான்
மூர்க்கமான வேகத்தில்
விடியும் வரை சிரித்துக்கொண்டு
கதறுகிறேன்
மூர்ச்சையான இரவுகளில்
என் மார்பும் யோனியும்
பெற்றுப்போன வலியில்
தினம் உணர்வினை
வெறுத்து செத்து மீள்கிறேன்!

விடிந்ததும் வேசி என்கிறான்
விபச்சாரி என்கிறான்
விலை மகள் என்கிறான்
வன்மம் கொண்ட காம வெறியை
தணித்தபின் யோக்கியனாய்!

செத்த பிறகு புதைக்காதீர்கள்
மீண்டும் தோண்டியெடுத்து
புணருவார்கள்
எரித்துவிடுங்கள்
சாம்பலாய் கலந்துவிடுவேன்
காற்றோடு!

கண்ணீரோடு விலைமகள்!

--- கோவை சசிக்குமார்

குழந்தையின் கண்கள்
வெகுவாக கவர்கிறது
பறந்து திரியும் பட்டாம்பூச்சி !

--- லோஜி

கடவுளின் சிரிப்பு
---------------------
வெள்ளை வேட்டி,
தோளில் மடித்து தேய்த்த துண்டு,
வெற்றுடம்பில் எப்போதும் பூனூல்,
நெற்றியில் மூன்று விரலால் போட்ட
திருநீறுடன் தரையில் அமர்ந்து,
ஈக்குச்சி உதவியுடன் மதிய உணவிற்கு
தரையில் அமர்ந்து,
ஆல இலைகளைக் கோர்த்து
இலை பின்னும் 'தாத்தா'.

நாலுமுழம் வெள்ளை வேட்டி,
வெளிர் நீலத்தில் சட்டை,
மூக்கு கண்ணாடியுடன்
மர நாற்காலியில் அமர்ந்தபடி
பொன்னியின் செல்வன் படிக்கும் 'அப்பா'.

நெற்றியில் வட்ட குங்குமம்,
தலையிலே சூடிய மல்லிகைச் சரம்,
அடுப்பில் சோறு கொதிக்க,
அடுக்களையில் அமர்ந்தபடி
அரிவாள்மனையால் காய்கறி நறுக்கும் 'அம்மா'.

தளர்ந்த ஈரக்கூந்தலை முடிச்சிட்டு,
துடைத்துவிட்ட முகத்தில் பொட்டுடன்
அம்மாவுக்கு உதவியாக என் 'மனைவி'.

காதுக்கருகில் வானொலியை வைத்து
தமிழ் பாடலுக்காக அதன் காதை திருகும் 'தம்பி'.

முகத்தில் நாளைய கனவுகளுடன்,
பட்டுப்பாவாடை தாவணியில்,
அண்ணன் வாங்கிக் கொடுத்த
கோலப்புத்தகத்தை கையில் வைத்து,
முற்றத்தில் நாளை போடப்போகும் கோலத்திற்கு,
வெள்ளைத் தாளில் ஒத்திகை பார்க்கும் 'தங்கை'.

இவர்கள் எல்லோரையும் ஒரே நேரத்தில்
முகம் பார்க்க வைத்து..புன்னகையை வரவழைத்தது,
தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த
என் ஒரு வயது மகளின் "களுக்" கென்ற சிரிப்பொலி!

--- பட்டுக்கோட்டை பாலு

எல்லாவற்றையும் மறக்கச் செய்யும் காலம் ..
என் ஞாபகங்களிடம் மட்டும்
மண்டியிட்டு மரணித்துப்போனது ..

இரத்த ஓட்டம் வற்றிப்போன இதயமாய்
வறண்டே கிடக்கிறது இந்த வாழ்க்கை .
தூக்கு தண்டனையின் பாதியில்
கயிறறுந்து போன கைதியின் மனநிலை போல் புத்தி
பேதலித்து போனது ..

நாளை சாயப் போகும் மரத்தில் அமர்ந்து
வருங்காலத்தின் கனவை இரசிக்கும்
பறவையின் பாசாங்கு தான் எனக்குள்ளும் ..

நான் வீழ்வேன் என்றறியாமல்
என் காலடிக்கு கீழே பள்ளம் தோன்டுகிறேன்
சிறந்த முட்டாளென தம்பட்டமடித்துக்கொண்டே ..

ஏனோ புரியவில்லை
ஆகச்சிறந்த இந்த வேதனைகளின்
ஆணிவேர் நன்றாக பற்றி
வளர்கிறது என்னையறிந்தே ..

--- நவிதாபிரியன்

## இனியென்ன விதி செய்வீர்

----------------------------

மெல்ல மெல்ல
எழுந்து கொள்ள முயன்றது
அது....

சட்டென யாரோ
தள்ளிவிட்டதைப் போலவொரு
நிகழ்ச்சி...
மீண்டும்
நலிந்து விழுந்தது தரையில்....!

வெடித்த நிலத்தின்
பள்ளங்களுக்குள் இருந்து
ஏதோ அழைப்பதாய்
உணர்த்திக் கொண்டிருந்தது
ஒரு வறண்ட அசரீரி....

புழுதியை துரத்திக் கொண்டு
ஓடி வரும் மாமிச வாடையை
விலக்கிவிட முடியாது
உறிஞ்சிக் கொண்டிருந்தது காற்று.....!

மாறுவேடம் பூண்ட நெருப்பு
முலைப்பாலாய் தீயூட்ட
மெதுமெதுவாய் சப்பிக்கொண்டிருந்தது
ஆற்றின் அடையாளங்கள்...

இனி எழ வாய்ப்பின்றிப் போன
அது உறுதியாய் விழ
தாங்கிப் பிடித்தது அந்த
கட்டாந்தரை...!

எந்த ஆர்ப்பாட்டமும்
அலட்டலும் இல்லாது
அந்த உயிரை எடுத்து
மெது மெதுவாய்
பசியாறி கொண்டது
பட்டினி !

--- கே.எஸ்.கலை (இலங்கை)

என் புடவை நுனியை
திருகிக் கொண்டிருக்கும்
தமிழ்க் குட்டி
பேருந்து சத்தம்
கேட்கும் போதெல்லாம்
இறுக்கமாகிறாள்
வாங்கிக் கொடுத்த
டெய்ரி மில்க்
அவளை சமாதானப்படுத்த
தெரியாமல் சட்டைக்குள்
அடைக்கலமாகிறது
அவள் கண்கள் கேட்கும் கேள்விக்கு
விடை தெரியாமல் முழிக்கிறேன்
இதோ அவள் பயந்த
அந்த பள்ளிப் பேருந்தில்
ஏறும் முன்
என் பொம்மைக்கு மறக்காம
ஊட்டிவிட்டும்மா..எனச்
சொல்லிவிட்டுப் போகிறாள்
ஆனால் அவளைக் கேட்டழுகும்
பொம்மையை எவ்வாறு
சாப்பிட வைக்க....
யோசித்தபடியே அவளைப் பார்க்கிறேன்
அவளோ எவ்வித சலனமுமின்றி
எனைப் பேருந்தில்
கடந்து செல்கிறாள்...

--- பிரியதர்ஷினி செல்வக்குமார்

வழியெங்கும் எருக்கஞ்செடி
வரவேற்கும் பாதையது

இடையிடையே ஐந்தாறு
வேப்ப மரங்களும் பூவுதிரும்

நெடுவானம் பார்த்தபடி
ஆறேழு பனைமரங்கள்
சருகாக காத்திருக்கும்

இன்னும் ஒரு பர்லாங்கு தூரம்தான்

என்னுள் ஒளித்துவைக்கப்பட்ட காதல்
அவசரமாக ஓடுகிறது

உத்தேமான தேடலை
தவிர்க்கமுடியாமல்
பரிச்சயமான சாயலை
பிடித்துவிட விரைகிறது

வாய்க்கால் தாண்டி பூத்திருக்கும்
சாமந்திகளை பறித்திட மனம் சொல்ல

நிழல் ஒழுகும் பூவரசமரம் கடந்து
பூ மலரும் சிரிப்புடன்
ஆடுகள் மேய்த்துக்கொண்டிருக்கிறாள்

பார்த்ததும் உயிரை
ஒப்படைத்துவிடுகிற பார்வையது

எனக்கு தெரிந்து
மறக்க முடியாத அழகது

இன்னும் அப்படியேதான் இருக்கிறது

நான் வரைய ஆரம்பித்து
பாதியில் முடித்த
காதல் சித்திரமொன்று

பூவரசமரமும்.. சாமந்தியும்..
ஆடுகளும்.. அவளுமாய்..

--- கோபி சேகுவேரா

நிறைந்திருந்த பேருந்தில்
பார்க்க நேரிட்டது வெளிறிய முகத்துடன்
நின்றிருந்த அவளை..
மேலும்
அவளருகில் இரண்டும்
ஒக்கலில் ஒன்றுமாய்
அவள் குழந்தைகளை..
மேலும்
மூன்றாம் பிறையென
லேசாக மேடிட்டிருந்த
அவள் அடிவயிற்றை..
மேலும்
அவளருகில் விட்டேத்தியாய் வெறித்திருந்த
அவள் கணவனை..
மேலும்
எதிர்பாராமல் நிறுத்தப்பட்ட
பேருந்தின் குலுக்கலுக்குத் திடுக்கிட்டு அடிவயிற்றைத்
தாங்கிய அவள் கரங்களை..
மேலும்
குலுங்கி வெளியே தலைநீட்டிய
அவள் கைப்பையிலிருந்த
கருக்கலைப்பு மாத்திரையை..
மேலும்
அதைப் பார்த்து துளிர்த்த அவள் கண்ணீரை..
மேலும்
மங்கலாய் பின்னோக்கி விரைந்த
சாலையோர மரங்களை.

--- பா. வனிதா ரெஜி

கவிழும் இரவை கழிக்கவென்றே
பெருங்குரலெடுத்துப் பாடும்
இரவுப்பாடகன் இன்றும்
இதோ பாடத் துவங்கி விட்டான்.

அவனது பாடல்கள்
உங்களுக்கான பாடல்களில்லைதான்..
ஆயினுமென்ன
உங்கள் இதயச் சுவற்றில் கன்னம்
வைத்து திருட நுழைகிறது.

அப்பாடல்கள்
கரைதொட முடியாமல் சுருங்கியோடும்
ஆற்றின் ஆற்றாமைக் குறித்தவை.

பாளம்பாளமாய் வெடித்துக் கிடக்கும்
விளை நிலங்களை ஈரப்படுத்தவியலா
நீரின் சோகங்கள் குறித்தவை.

விதைக்க முடியாமல் தவிக்குமொரு கிழவிவசாயின்
கண்ணீரை துடைக்கத் துடிக்கும்
பிரயத்தனங்கள் நிறைந்தவை.

அதைக் கேட்டபடி தான்
உச்சுக் கொட்டியபடியோ
கண்ணீர் வழிந்தபடியோ
தூங்க முயல்கிறீர்கள் நீங்களும்.

நீங்கள் கண்ணயரும் அவ்வேளையில்தான்
அங்கே குளிரூட்டப்பட்டவோர்
அறையில் இடப்படுகின்றன
நம்மையும் நம் நதிகளையும்
விளைநிலங்களையும் மொத்தமாய் விலை பேசி முடித்த
ஒப்பந்தங்களின் மீதான கையெழுத்துகள்.

--- சுரேஷ் பரதன்

ஒரு நாயின் இரவை பெரிதும் விரும்புகிறேன்
--------------------------------------------

ஒரு நாயின் இரவை
பெரிதும் விரும்புகிறேன்.....
நிழல் பற்றிய பிரக்ஞையின்றி
வீதி வீதியாய் ஊர் பிரித்து ஓடுவது
அழகாக இருக்கிறது...
செம்மை நிறத்தின் மறுபுறம்
தன் நிறம் தொலைத்தல்
அடக்கவியலாத குரைப்புக்கு நிகரானது....
சுவர் சித்திரங்களை
சிறுநீர் அடித்து சிரித்து விளையாடுதல்
இரவுக்கே ராஜா என நம்புதல்.....
பிரபஞ்சத்தின் கண்களை
படக்கென பிடித்து வெற்றிடத்தில் தின்று
விடுதல் ஒரு பெருங்கொட்டாவிக்கு
முன் பசி பழகுதல்....
முன்னங்கால் நீட்டி மண்ணோடு புரண்டு
தாபத்தின் மென் கடித்தலை
தானே செய்யுதல் ஜென் ஒழுக்கும்
கெக்கே பிக்கே...
அதிகாலைக்குள் எப்படியும்
எதிர் வீட்டிலிருந்து
சம்போகத்துக்கு வந்து விடும் சமிக்கை
ஆக சிறந்த நாய் பொழப்பு....

--- கவிஜி

எங்கள் கலப்பையின்
மோழியில் அப்படி என்ன
இருந்துவிடப்போகிறது ,
வறுமையின்
கைரேகையைத் தவிர....

--- ஏர்நடையன்

எங்கள்
இருவருக்குமான உயரம்
ஏறக்குறைய சமன்பட்ட நேரத்தில்
மெல்ல மெல்ல நாங்கள்
நண்பர்களாக முயற்சித்தோம்...

இருவரின் சட்டைகளிலும்
அடிக்கடி உடல்களை
மாற்றிக் கொள்வோம்... !

பரஸ்பரம் இருவரும்
முகச்சவரம் செய்து
மீசை ஒதுக்கிக் கொள்வோம்...!

இடையிடையே
ஒருவரை ஒருவர்
கிண்டலடிப்போம்
சண்டை பிடிப்போம்
சமரசமாவோம்....!

ஆன்மீகம் முதல்
அந்தரங்கம் வரை
அலசி விவாதிப்போம்...

தலைமுறை இடைவெளி தாண்டி
நட்பு முற்றிய நேரத்தில்
நோய் முற்றி-நண்பர்
இறந்து போனார்...

கணவர் இறந்து போனதற்காக
என் அம்மா அழ

நண்பர் இறந்து போனதற்காக
நான் அழுதேன்

--- வணவைதூரிகா

எழுதுங்கள்
அக் குளக்கரையில்
முடமா(க்)குதல் இதுதானென்று...

புகைப்படமெடுத்து
புகாருரையுங்கள் காவல் துறையிடம்
இதுதான் நதியிருந்த தடமென்று...

முகத்துவாரத்தில் நின்று
கண்ணீர் வடியுங்கள்.
இதுதான் நதியின் கடைசித் துளியென்று...

மூன்றாம் நாள்
சிமெண்டுப் பால் தெளியுங்கள்
இதுதான் வனம் மரித்த இடமென்று...

ஆள்பவன் முகம் எதிராய்
கரம் அறுத்துக் காட்டுங்கள்.
விவசாயியின் உடல் ஓடுவதும்
செங்குருதிதானென்று...

தூக்குக் கயிறென்று மட்டும்
துணிந்து விடாதீர்கள்.
அது நம் பறையின்
தப்புத் தாளங்கள்...

--- கணேஷ் இராமசாமி

கொஞ்சம் சிப்பி
கொஞ்சம் மீன்கள்
கொஞ்சம் மணற்துகள்
கொஞ்சம் நனைந்த ஆடை
கொஞ்சம் கடற்பாசி
என்னுடன் வீடு நுழைகிறது கடல்...

--- லீலா

நிறமிழுத்தல்

------------

நகரத்து சல்லிக் கற்களின்
கூர்மைகளால் கீறல்பட்டு
காயம்பட்டுக் கிடக்கிறது
கிராமத்து கூழாங்கற்கள்

பசித்திருப்பவனின்
உணவைத் திருடி
ஜீரணிப்பவர்களின்
கழிவறைகளில்
கரையாமலே மிதக்கின்றன
பள்ளியேட்டில் படித்த
நேர்மைக்கான சொற்கள்

துரோகங்களால்
நிறமிழந்து போனவனின்
கண்களில் அவ்வப்போது
நிழலாடுகிறது மனித வேடமிட்ட
சில மிருகங்களின்
நிழற்படங்கள்

இடிக்கப் போகும்
இந்த பாழடைந்த வீட்டின்
சிதிலடைந்த சுவற்றின்
சில்லுகளின் வழியே
கசிந்து கொண்டே
இருக்கிறது...
வாழ்ந்து கெட்ட ஒருவனை
விரட்டியடித்த வறுமை.

--- வி.ம.செல்வகுமார், செய்யாறு.

மாட்டுக்கறி
எனக்கு பிடித்தமான உணவு..
தாம்பரம் நடைபாதை கடைகளில்
இன்றளவும் என் பெயர் தெரியாத பாய்
என் தாடி வடிவமைப்புக்காக
பாய் என்றே அழைக்கிறார்..!
நான் கொண்டு வரும்
தக்காளி சட்டினிக்கு
சபீக் உசுரை கொடுப்பான்..
என் அலுவலகத்து குலாமிடம்
நோன்பு கஞ்சி கேட்டு அடம்பிடித்தது
உங்களுக்கு தெரிய வைக்கிறேன்..!
கல்லூரி நண்பன் இம்ரான்கானின்
ஆதர்ச ஆட்டக்காரன் அஃப்ரிடி தான்
எனக்கும் ஆதர்சம்..
சரி.. அதையெல்லாம் விடுங்கள்..
பள்ளி நாட்களில் ஒவ்வொரு ஆண்டும்
யோகா போட்டியில் முதல் பரிசு வென்றவன்
ஆயுப்கான் என்பது உங்களுக்கு
தெரியாமலே போகட்டும்..!!

--- கனா காண்பவன்

காலதாமதமான
பருவமழையை
வாளிக்குள்
சேமித்துவைக்கிறாள்
வறண்ட பூமிக்காரி
எதேச்சையாக
அடித்து விளையாடும்
குழந்தை
நெளியும் நீர்

--- புன்னகை பூ ஜெயக்குமார்



படைப்பு சமூகத்தின் இணைப்பு

தன்பாலினசேர்க்கை காலம்
----------------------------

தகவல் மையத்தின் மும்மொழிகளிலான
அடுத்தடுத்த அறிவிப்புகளை
செவிகளுக்குள் அனுமதித்தபடி
புறப்படும் நேரம் தவறியும்
வராத தொடரிக்கு சொற்ப மனிதர்களோடு
நடைமேடை இருக்கையில் காத்திருக்கிறேன்
இரவலரை தாண்டியுள்ள புத்தகக் கடையில்
குவிக்கப்பட்ட அதிகாரத்தின் ஆதரவாளர்
புத்தகங்கள் அதிகமிருப்பதாய் தெரிகின்றது
பத்து ரூபாய் பார்வை வீசி
என்னைக் கடந்து இடப்பக்கம் செல்கிறவன்
குளம்பி விற்கிற பட்டதாரி
தானியங்கி படியேறி வந்தவரொருவர்
முறைத்த முகமோடு அறிமுகமாகி
அருகிலமர்கிறார் வெகுநேர காத்திருப்பிற்குப் பின்
எதேச்சையான வலப்பக்க தலை திருப்பலில்
கழுத்தில் மஞ்சள் கயிற்றோடு நின்றிருக்கும்
பெண்மணியின் வெண்ணிடுப்பு தென்படுகிறது
கூடவே அதிலுள்ள இரு மடிப்புகளும்
எந்த காலம் கடவுளைப்போல்
அங்கே மடிப்புகளை திணித்திருக்குமென
யோசிக்கும்பொழுதில் இலவச வை-பை வசதியில்
சொற்பத்தில் ஓரிளைஞன் ஓரிடத்திலும்
மற்றோரிளைஞ் வேறிடத்திலும் தன்பாலினசேர்க்கை
காணொளியை அவசரமாய் பதிவேற்றிக்
கொண்டிருக்கலாம்.

--- நுற்பவினைஞன்

வீட்டின் குப்பைகளை பெருக்கியவள்
கூலி வாங்கினாள் புறவாசலில் நின்று
வீட்டில் இன்னும் குப்பைகள்....

--- ஐ.தர்மசிங்

எனக்கு பிடித்த நீ
மண்ணிற்கு பிடித்த மழை....

எனக்கு பிடித்த நீ
மலருக்கு பிடித்த காற்று....

எனக்கு பிடித்த நீ
தேன் சிட்டுக்கு பிடித்த மது....

எனக்கு பிடித்த நீ
கடலுக்கு பிடித்த நிலவு....

எனக்கு பிடித்த நீ
இரவுக்கு பிடித்த நட்சத்திரம்....

எனக்கு பிடித்த நீ
நெஞ்சம் விரும்பும் ராகம்...

எனக்கு பிடித்த நீ
என்னை சாய்க்கும் அன்பேனும்
பேரலை......!

--- மனோஹரி

அவளின் தெளிந்த நீள்பார்வையும்..
கம்பீரமாய் அமர்ந்த கோலமும்..
அரிதாகிப் போன...
பாவாடை தாவணி நேர்த்தியும்..
ஏனோ தோன்றியது..
அவள்....
எழுந்து வந்த
ஏதோ ஓர் கன்னிமார் சாமிதான்.
நாத்திகத்திற்குள்ளும்
ஒரு பூ பூக்கத்தான் பூக்கிறது.

--- ஜே.மஞ்சுளாதேவி

இந்த பிரபஞ்சம் என்பதே ஓர்
பிரிவின் அடையாளம் தான்,
அண்டம் சிதறியதால்
பூமி பிறந்தது,
கோள்கள் பிறந்தது,
அண்ட சராசரங்களும் உலகம் ஆனது
நான் மட்டுமல்ல
அத்தனை மனிதர்களும்
கருவறையில் இருந்து
வெளியில் வந்தவர்கள் தான்
இதுவும் ஒரு வகை பிரிவு தான்
எல்லோருக்கும் அது கருவறை
எனக்கோ அது கடவுளின் அறை
தாயின் கர்ப்பத்திற்குள் சுவாசித்து
பாதுகாப்பாக இருக்கும்
எந்த குழந்தையும்
வெளியில் பாதுகாப்பாக இருக்க முடிவதில்லை
எனவே அன்னை ஓர் ஆலயம்.
பிரிவு
வலி மிகுந்தது
துக்கமும் சந்தோசமும் கலந்தது
மறக்க நினைப்பது
நினைக்க மறந்தது
இரண்டுமே பிரிவு தான்,
பிரிவின் சாராம்சம்
நீ இந்த பூமிக்கு
எப்போது வந்தாய்
எப்போது போவாய்
என்று உனக்கே தெரியாது
எனவே
பிரிவு
பல சூட்சுமங்களை சொல்கிறது
நீ எய்த கூடிய
ஒவ்வொரு பருவமும்
அதன் வாழ்க்கையும்
ஒரு பிரிவு தான்
உன் தாயின் கர்ப்ப பையில்
இருந்து வெளியில் வந்ததால் தான்
இந்த பூமிக்கு வந்தாய்
எனவே பிரிவை விரும்பு
உன் பிரிவு கொடுக்கும் எந்த
வலியையும் நீ ஏற்றுகொள்.
உன்னை சந்தோஷ படுத்தியவர்கள்
உன்னை துக்க படுத்தியவர்கள்
இருவருமே இந்த உலகை விட்டு
ஒரு நாள் பிரிவிற்கு அடைக்கலம் ஆவார்கள்
எனவே பிரிவு என்பது
சதி அல்ல நாம் ஏற்றுகொள்ளபடாத ஒரு விதி

--- செல்வ கார்த்திகேயன்

அசாதாரண விருப்பங்கள்
--------------------------
'விரும்பியதை எளிதாக
தேர்ந்தெடுக்க முடியும்' என்பதில்
நான் என்றும் உடன்பட்டதில்லை.
'பார்த்த, ரசித்த, பிடித்த எல்லாமும்
நம் தேர்வுக்கு உடனடியாக இணங்கும்' என்பதில்
இருக்கும்
மறைமுக உட்திணிப்புகளிலும்
இன்னும் நம்பிக்கை வரவில்லை.
சாதா தோசையா, முட்டை தோசையா
என்கிற சாதாரண
கண நேர தேர்ந்தெடுப்பில்
அத்தனை குழப்பமும் தீர்க்கமான முடிவும்
கிடைக்காதபோது,
அசாதாரண விருப்பங்களுக்கான
தேர்ந்தெடுத்தலில்
நம் மனதின் பக்கம்
நம் மனம் நிற்குமென்பது
என்னைப் பொறுத்தவரை நம்பிக்கையற்றதே.

--- மனோ ரெட்

கேள்விகள் பற்றிய நினைவுக் குறிப்புகள்
-----------------------------------------
வரண்ட நாவின் சுவை மொட்டினை
மலர்த்திடும் தேன் சுவையின் சொற்களல்ல
நடு இரவின் அடர் இருளான கேள்விகள்
கேட்பவர்களுக்கு சுவாரஸ்ய மாயிருப்பினும்
நெடு வெளிப்பயணத்தின்
நேரெதிர் பள்ளத்தாக்கினை நொடியில்
அறியும் கணமென
எதிர் கொள்பவர்களை நிலைகுலையச் செய்கிறது
கேள்விக்கு பதிலாய் எதிர்க் கேள்விகள்
கேட்கப்படுவது ஒரு உத்தியெனினும்
பதில் கேள்விகள்
ஒருபோதும் பதில்களாகாது
கேள்வியின் நியாயம் வெளிப்படையாயினும்
என்னிடம் ஏன் கேட்கிறாயென்பதும்
என்னைக் கேட்க நீயாரென்பதும்
பிரதிக்கு வெளியிருந்து செய்யும் விவாதங்கள்
அப்போது வழிதவறிப்போன குழந்தையின்
விசும்பலோடு
கேவியபடி நிற்கின்றன கேள்விகள்
சாதுர்யமான பதில்வாசிகள்
பல கேள்விகளுக்குப் பின்னாலும்
வனாந்திரத்தில் பூத்த ஒற்றை மலரென
ஒரு சொல்லில் விடையளிக்கக் கற்றிருக்கிறார்கள்
கூட்ட நெரிசலை சமாளிக்க
பேருந்து நிறுத்தம் தவிர்த்து மெல்ல உருட்டிப் போகும்
நகரப் பேருந்து ஓட்டுனரைப் போல
பதிலுரைக்காமலே
உரையாடலைத் தொடரக் கற்றவென் தோழனை
அடுத்தமுறை உங்களுக்கு
அறிமுகப்படுத்துகிறேன்
பல கேள்விகள்
பதிலைப் பெறுவதை விடவும்
பகையையே பெறுகின்றன
என்ற போதிலும்
கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன
கேட்டு விட்டோமெனும் நிம்மதிக்காக

---தமிழ் மணவாளன்

காற்றை கிழித்து கொண்டு ஒரு பயணம்,
நாற்கரச் சாலையொன்றில்!
கருநீள நாக்கென நீள்கிறது, தார் சாலை!
அதனை கடக்கும் யாவர்க்கும்
கதைக்கிறது, சிலபல கதைகளை!
பால்பிடித்த கம்மங்காடு ஒன்று,
தன்னுள் புதைந்த கதை!
ஊருக்குள் இருந்த, ராமசாமியின் தோட்டம்,
சாலையோரத்திற்கு வந்த கதை! அழகு கிராமம் ஒன்றை,
ஊடறுத்து உள்நுழைந்த கதை!
சிறுதேநீர் கடைகளும், புளிய, ஆல மரங்கள்,
நிழல் பரப்பிய, சிறு சாலையொன்று,
தன்னுள் மூச்சுமுட்டும் கதை!
தான் மூடிய வீடுகளின் எச்சங்கள், அதனை
உறுத்தியிருக்க கூடும்!
தார்சாலையை நிதானமாக கடந்த அந்த முதியவர்,
ஒருவேளை நினைவுகளில், தன்வீட்டு
முற்றத்தை கடந்திருக்கக் கூடும்!
வற்றாக் கிணறொன்றைத் தூர்த்த
கதையை சொல்லிய போது,
சிறுமழையொன்று சாட்சிக்கு வந்தது!
சிறுநிலங்களை கொண்டு,
பெருங்கனவுகளை வளர்த்த
மனிதர்கள் அகதிகளான கதை!
என் பயணம் முடிந்தாலும்,
கருநீளநாக்கு நீள்கிறது.
அது இன்னும் கதைகளை வைத்திருக்கக் கூடும்,
தன் மொழிகளை மாற்றி!

--- உவாமதி

ஆனந்தம்
------------

ஒரு நாள்
ஒரு பிம்பத்தை பார்த்தேன்
அனைவருக்குமே
தெரியும் படியான
தெருக்களில்
அழகுடனே
நெடுநேரமாய் நின்றுகொண்டிருந்தது

வருத்தத்தை கைகளில்
இறுக்கிப்பிடித்த மகிழ்ச்சியுடன்
தன் எதிரெதிராக
விரைந்துகொண்டிருந்த
மனிதக் கூட்டத்தைப் வியந்து
பார்த்துக் கொண்டிருந்தது

தனது அலைகளை ஏவி
அனைவரையும் நனைத்தது
எவரும் கண்டுகொள்ளவில்லை

நான் ஒருமையிலிருக்கிறேன் உங்களிடமிருந்து
விடுபட்டு
கிடக்கிறேன்
சிதறல் அன்று என்று
சொல்லிக்கொண்டது

சிறிது நேரம் ஓய்வின்றி
மங்கி மறைந்துபோய்
மறுபடி தோன்றியது கிடையாது

குழந்தைகள் மட்டுமே
இதை நிறைய நிறைய
வைத்திருக்கின்றனர்
அவர்களிடம் இருக்கும்
தன்னினத்தை கண்டு

புன்னகைத்தது
மகிழ்ச்சி கொண்டது

ஊர்ந்து பரவி
நாலா திசையும் கடந்தது
ஆறறிவின்
காலடியில் மிதிபட்டது

கடலோரங்களில்
மலைச்சரிவுகளில்
பூந்தோட்டங்களில்
அதிகளவில் சஞ்சரித்து கிடக்கிறது

ஏதேதோ தேடும் மனிதனிடம்
மட்டும் இல்லவே இல்லை
யாரும் அறியாத அதன் கம்பீரம்
மாசு படாது ஜொலித்து கிடக்கிறது...

நுரையிரல் காற்றை
உண்ணமறுத்துபோன
அந்த முன் நாழிகை
கடைசிவரை கிட்டவேயில்லையென
திட்டி மடிந்தான் மனிதன்....!!!

--- இரா.புருஷோத்தமன்

தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது முறை
தோல்வியை சந்தித்த
எடிசனால் தான்
நம் இரவுகள் ஒளிர்கின்றன.

--- சக்திஅருளானந்தம்

உன் வேகமெடுத்த
பேச்சுக்களின் ஸ்வரம்
தன் ஊட்டத்தை இழந்துவிட்டது

உன் பகட்டாடையும் பட்டாடையும்
அந்த நாள் நினைவுகளுக்காய்
ஏங்கி தவிக்கிறது

உன் முகத்தில்
ஒரு துளி புன்னகை வந்து விழாதா
தவமிருந்த சுவற்று புகைப்படங்களுக்கு
வருத்தமே மிஞ்சுகிறது

உன் வீட்டு கட்டிலறை
முத்த சத்தங்கள் மட்டுமே
கேட்டு சிரித்ததுபோய்

எலி விடும் கீச்சல் ஒலிக்கு
சிணுங்கிக்கொண்டே
இணங்கிக்கொள்கிறது

உன் உறவுகளின் பார்வை
மகிழ்ச்சி மலர்களை மறைத்து
பரிதாபக் கணைகளை வீசுகிறது

ஆனாலும்
கை தட்டி சிரிக்கிறது

நீ வலியச்சென்று வாங்கிவந்த
மதுபுட்டிகள் மட்டும்

நீ அன்பெனும் நிழலில் வாழ்ந்த
அந்த நாட்களை நினைத்து

--- கே.செந்தில்குமார்

கிளறப்படா குப்பைகள்

------------------------

குப்பைகள் கிளறப் பட்டுகொண்டே உள்ளது
புறப்பகுதிகளிலோ
அகமனத்தின் வாயிலாகவோ
பொருள் குப்பையின் கிளறல் பெருங்கையாயின்
தேவைக்கானதாகவும்
பிஞ்சு கைகளின் கிளறல்
வறுமை பசிக்கானது மட்டுமே
துன்பம் மட்டும் துரத்தாது
அதில் நோய் தொற்றுகளும் துரத்துகிறது
அங்கு வறுமைதான் வெற்றி பெறுகிறது
பரிதாபம் ஆனதல்ல
மாற்றத்திற்கானது
சுத்தமானதென சுய விளம்பரம்
சுகாதாரமான தென சில மருத்துவரின்
வழிக்காட்டுதலோடு அறிவிப்புகள்
புறத்தூய்மையோடு நெகிழி பொட்டல வடிவில்
விற்பனை
உற்று பாருங்கள்
அதில் காலாவதி தேதிகள்
காலாவதியையும் நீட்டிக்க கலக்கப் படும் கலவை
இரசாயனங்கள்
உணவும் உணவு சார்ந்த பொருட்களில்
நோவென மருத்துவரை நாட
மருந்து தரப்பட
புரியாது நம்பிக்கையில் விழுங்கி சரியானால்
வேறேதோ வருகிறது பக்க விளைவாக
இவையும் குப்பைதானே
சில உண்மைகள் மறைத்து
கிளறப் படாது
பரிமாற படுகின்றன

--- ஏ.பி.எஸ்.ஷஹீத்

## அவளே என் தொடுவானம்
----------------------------

வாழத் தெரியாமல்
வாழ்ந்து முடிக்கிறேன்

தூரிகை யின்றியே
ஓவியம் வரைகிறேன்
எழுதுகோ லின்றியே
கவிதை யெழுதுகிறேன்

காகித மின்றியே
கடித மனுப்புகிறேன்
வாசங்களைத் துரத்திவிட்டு
வண்ணங்கள் ரசிக்கிறேன்

உறவுகளைவிட அதிகம்
உன்னோ டிருக்கிறேன்
உனையே யென்றன்
உயிரென் றணைக்கிறேன்

கட்டைக ளின்றியே
மெல்லி சைக்கிறேன்
மட்டை யின்றியே
பந்தா டுகிறேன்

தூக்கத்திலு முன்மேல்
தூங்கி வழிகிறேன்
தொடுவா னாயுனைத்
தொழுது யெழுகிறேன்

தொட்டுத் தொட்டுத்
தோள்பல மிழக்கிறேன்
தொடத்தொட மயக்கும்
தொடுதிரைக் கணினியே...

அலாவு தீனுக்கு
பூதம் அடிமை
அறிவியல் பூதமே --உனக்கு
நான் அடிமை!

--- கவித்தாசபாபதி

பாம்புகள் நிறைந்த குளம்.
பயமில்லாமல் நீந்துகிறது
பால் வண்ண நிலா.

சலனமில்லாத தடாகம்.
மலர்ந்திருக்கும் தாமரை.
சிக்கலான வேர்கள்.

குஞ்சுகளை விழிக்கச் செய்தது.
கூடுவந்த தாய் வாயில்
கீச்சிட்டக் கோழிக்குஞ்சு.

பைத்தியத்திற்கு மருந்து
ஆராய்ச்சி செய்தார்.
ஆராய்ச்சி பைத்தியமானார்.

மாமனை அடித்தனர் மொட்டை.
காது குத்தினார்கள், விழாவில்
மாமன் அடிக்கணுமாம் மொட்டை.

கத்தரிக்காய் முற்றினால்
சந்தைக்கு வந்துதான் ஆகணும்;
சந்தையில் வந்தபின்னும்
விலை போகவில்லை முதிர்கன்னி.

--- மெய்யன் நடராஜ்

ஒரு போருக்கான பிரகடனம்
-------------------------------

கோலோச்சும் கடலினை ஒத்த
உன் நபும்சக பேரிகையை
இன்றும் கேட்கிறேன்
என் இனிய எதிராளியே

நன்னயம் செயச்சொலும்
தாடிவேந்தனை
எனக்காய் மட்டும் விட்டுக்கொடுத்து
நீ நந்தவனம் வளர்க்கிறாய்
நாக்கில்

இந்த ராஜபாட்டை
எனக்கானது அல்ல
உனக்கானதும் அல்ல

ஞானம் துளிர்ப்பதை
கொய்துவிடுகிறாய்
என் வேர்களை
என்ன செய்வதாய் உத்தேசம்?

மின்னலைப் பிடித்திருக்கிறேன்
நீ உடைத்துப் பார்க்க
வானத்தில் நடந்திருக்கிறேன்
என் மேகத்தில் நீ இளைப்பாற
பச்சையமாய் இருந்திருக்கிறேன்
நீ இலைக்கேற்ற நிறம் பிரிக்க

ஏதோ சில மாயைகளுக்குள்
மலர நினைக்கிறாய் நீ

மனித வேடம் தரித்து
மிருகம் தவிர்க்கிறேன்
நான்

உன் வேடந்தாங்கலில்
உன்னோடு கைகுலுக்க
ஆயிரம் பறவைகள்

நானோ இங்கு
தீப்பந்தக் கனவுகளுடன்
ஒற்றைத் தீக்குச்சியாய்

வா
விடாத நம் சமர்களில்
சமாதானப் புறாவை முன்னிறுத்தி
சிரித்தே வஞ்சம் வளர்ப்போம்

காலமரம் கனிகளை ஈவதை
என்று நிறுத்தியுள்ளது
என் இனிய எதிராளனே?

--- சுதந்திரன்

ஒரு பொய்யை நம்பவைக்கவே
பல உண்மைகளைச் சொல்கிறார்கள்
கண்ணாடியில் காணும் பிம்பத்தை
உடன் அழைத்துச் செல்லுமாறு கட்டளையிடுகிறார்கள்
தாகமென்று ஏந்திய கரங்களில்
விழிகளை பிச்சையிடுகிறார்கள்
இந்த. வாழ்வைக் கொண்டாட
இவர்களே வழிகாட்டியென
ஊரெல்லாம் கூறிவருமாறு
கட்டளையிடுகிறார்கள்
இப்போதைக்கு கூண்டுப் பறவையோடு
சில வாழ்வை சொல்லுதல்
அவசியமெனப் படுகிறது

--- க.அம்சப்ரியா

உங்கள் ரத்த வெறிகளின்
சதிகள் நிச்சயம்
மண்ணைக் கவ்வும்..

உங்கள் உண்மை முகம் அறிகையில்
நீங்கள் துரத்தப்பட
கைபர் போலன் கணவாய்கள்
மீண்டும் திறக்கப்படும்.

பிரிவினைகள் தான் உங்கள் மந்திரம்..
வெறுப்பே உங்கள் மூலதனம்..
குள்ள நரி சதியே உங்கள் தந்திரம்..

இணக்கம் எங்கள் மந்திரம்..
உண்மையே எங்கள் உயிர் மூச்சு.
மனித நேயம் எங்கள் மந்திரக் கோல்..

மக்களின் மனங்களில் அவர்தம்
விஷ விதை விழும் முன்
உணர்வுகளால், உறுதிகளால்
ஒன்றிணைவோம்.

உணர்ச்சி வசப்பட்டு
கலங்கித் தவிக்கும் கையறு நிலையில்
முடங்கிப் போய் விடும்
முட்டாள்களல்ல நாம்.!!

இதயங்கள் இணைப்போம்.
இணக்கங்கள் சமைப்போம்.
தேசம் காப்போம்.!!

பெருங்கடலின் துவக்கமே
பிர்அவ்ன்களின்
முடிவுகளுக்கான
எல்லை!!

அன்பாலும், நீதியாலும்
ஒன்றாய் - நன்றாய்
ஒன்றிணைந்த
கரங்களைக் கொண்டு
முன்னேறுவோம்..!!

நீதியைப் நேசிப்போர்
வேற்றுமையில் பிணங்கிக் கொண்டு
வருந்துவதில்லை..!!

--- அப்பாஸ் அல் ஆசாதி

இந்த சுகவீன்மையின்
கணங்கள் என் நாசியில்
ஒருவித எரிச்சலை
ஏற்படுத்துகின்றது
தலையின் மேல் ஏறி
அமர்ந்த சாத்தான் என்
நாட்குறிப்பின் பக்கங்களை
நன்கு உண்டு பெருத்து
தன் வீங்கி தொப்பையை
தடவியவாறு மிகுந்த
பாரம்மொன்றை அழுத்திய
வண்ணம் இருக்கின்றான்
சோர்வின் உச்சத்தில்
சாத்தானின் காதில் வேதம்
ஓதுகின்றேன்!
என்றோ நான் பருகிய
கடலின் நீர்
சுவாச வழியாகவும்
இமைகளின் ஓரமும்
திரவம்மொன்று கசிந்தொழுகுகின்றன....

--- ஜானு

வசதியான மறதிகள்
--------------------
எரிபொருள் தீர்ந்த இருசக்கர வாகனத்தை
உந்திக்கொண்டு செல்பவரை நீங்கள்
பெருமிதமாய் கடந்திருக்கக் கூடும்..

மனைவி குறிப்பிட்டு சொல்லியிருந்த
பச்சைமிளகாயை மட்டும் வாங்க மறந்து
திரும்பிய நண்பர் கதைகேட்டு சிரித்திருக்கக் கூடும்...

வங்கியில் பேனா இல்லாமல்
இரவல் கேட்டவரை எரிச்சலுடன்
பார்த்து உதவியிருக்கக் கூடும்..

ஒருவழிப் பாதையில் சென்று
காவல்துறையிடம் மாட்டிக் கொண்டவரைக்
கண்டு அலட்சியப் புன்னகை பூத்திருக்கக் கூடும்..

தாமதமாய் வந்து ரயில் புறப்படும்
நேரத்தில் முன்பதிவுப் பெட்டியை
தேடி ஓடும் பயணிமேல் பரிதாபப் பட்டிருக்கக் கூடும்..

அனாவசிய சந்தேகங்களை
ஒவ்வொன்றாய் கேட்டுக்கொண்டு
கௌண்டரை விட்டு நீங்காதவரைப் பார்த்து
மனதில் வசைபாடி வரிசையில் நின்றிருக்கக் கூடும்..

புத்தகத்தை கையில் எடுத்தாலே
கண்கள் சொருகுது என்கிற நண்பருக்கு
வாசிப்புப் பழக்கத்தின் அவசியம் குறித்து
வகுப்பு எடுத்திருக்கக் கூடும்..

குளியலறை விளக்கை அணைக்க மறந்த
குடும்ப அங்கத்தினரை பொறுப்பில்லாதவர் என
திட்டித் தீர்த்திருக்கக் கூடும்..

அப்போதெல்லாம் -
அந்த கதாபாத்திரங்களாய் நீங்களும்
சில தருணங்களில் இருந்திருக்க நேரிட்டதை
மறந்தும் போயிருக்கக் கூடும்..

--- ஜி ராஜன்

காற்றில் எரிந்தவள்
--------------------
அந்த அழகு தேவதையின்
அடி வயிற்றிலிருந்து
பீறிட்டு வந்த மரணக்கூச்சல்
கடப்பாரையால்
பூக்களின் நெஞ்சைப் பிளந்த
ரணங்களின்
குருதிக்கரைசலை நினைவூட்டுகிறது
என் மூளையில் எரிமலையாய்
பற்றி எரிந்த அவள் குடிசையின்
சாம்பலில் கரிக்கட்டையாகி
இவ்வளவுதான் வாழ்க்கையென
சொல்லாமல் சொல்லிச்சென்ற
வேதனையின் உச்சம்
கடலில் கரைக்கப்பட்டு
சூனிய ஆண்டுகள் பலகடந்தும்
என் வீதிவழியே கடந்துசெல்லும்
அவளின் சிரிப்பலையும்
நாய்களின் ஊளையும் இருளில்
திகைக்கவைக்கும் திகிலாய்...
கொழுந்து விட்டெரியும்...
நெருப்புத் துண்டங்களா...ய் !

--- இராஜராஜேஸ்வரி

எப்படி இருக்காளோ
என்னபெத்த இராசாத்தி
எட்டு மணிக்கிடையில்
எழுந்திருக்க மாட்டாளே

மூணுமணி பால்காரன்
கேன்தட்டி போனவுடன்
பேரசொல்லி எழுப்பியே
தொண்டதண்ணி வத்திபோகும்

தாவணி ஒருபக்கம்
தலையணை மறுபக்கம்
புரண்டுபடுப்பாளே தவிர
பொழுதுவராம எழமாட்டா

இராத்திரி சிரிக்கும்போது
நரிவிரட்டும் கனவுலேன்னு
நானும் சிரிச்சுவிட்டு
நடுநிசியாயிடும் தூங்கவே

பாவிமக சிரிச்சதெல்லாம்
பையன்சொன்ன கதைக்குன்னு
இப்பத்தெரியுதே தெரிஞ்சும்
ஏதும்செய்ய முடியலையே

போன பொங்கலுக்குவந்தவ
பொங்கிபொங்கி அழுதுபோனா
என்னான்னு கேட்டதற்கு
எல்லாம் விதியென்றுபோனா

இப்படி உழைச்சுநீயும்
என்னத்த கட்டபோறேன்னு
கையைப்பிடிச்சு பார்த்தேன்
காய்காச்சு பழுத்திருக்கு

பொறந்தவீடு மட்டுந்தான்
பெண்களுக்கு சொர்க்கமுன்னு
வாழும்போது தெரியலையே
வசங்கெட்ட புள்ளைங்களுக்கு ?

காதலுன்னு சொல்ராக - என்ன
கண்றாவின்னு புரியலையே
மோதியுடைஞ்சு போச்சே
நாசேத்த ஆசையெல்லாம் .

--- கே.பாலன் வடக்கத்தியான் பட்டி-மதுரை

குற்றமற்ற தன்மைக்காய்
தீவாந்திர தண்டனையில்
சிறையிலுள்ள இதயத்தினுள்
பட்டாம்பூச்சிகளாய்
குறு குறுக்கும் நினைவுகள்
திறந்துவிட -மறந்தும்
பறக்காததேன்?
சொல்லின் முனையால்
குத்தப்பட்ட இதயம்
கவரிமானின் குருதியென
கரியநிறமாய் வழிந்துகொண்டிருந்தது...
லாயத்தில் கட்டப்பட்ட
இதயம் -அதன்
பிளந்த காயத்தின் விளிம்புகளை தைக்க
இரவின் சூட்டடுப்பில்
பரவும் மெல்லிய வெப்பம் வேண்டும்
அதமபாவனையில் அதன் ஜீவிதமெனினும்
சிலந்தி நூலின் மீதும்
ராஜ்ஜியமுண்டு சிலந்திக்கும்...
நம்பியே கிளை வளைத்து
கொடி தொடுத்தும் யாழ்மீட்டும் எப்பொழுதும்!

--- லதா நாகராஜன்

இவள் சிலுவைக்கு ஆறு ஆணிகள்
-----------------------------------

மெல்லிய கித்தாரின் நரம்புகளை
அடிக்கடி மீட்டு
அறுத்துக் கொண்டிருக்கும்
அவளுக்கு உணர்வில்லை

இணக்கத்திற்கும்
பிணைப்பிற்கும் எந்த வேறுபாடும் தெரியாத
அவளின் கட்டிலுக்கு நல்லவேளை
உயிரே கிடையாது.

இடது கைக்கும்
வலது கைக்கும் இடையில்
மார்ப்புக் கூண்டின் மத்திய பிரதேசத்தில் தான்
துரோகத்தின் ஆணியை அடித்து வைத்திருக்கிறது
வாழ்க்கை

தொடுதலில் உணர்வு
எதுவென்றே தெரியாத அவளின் சிலுவையில்
அடிக்கப்பட்டிருக்கும் ஆணி எல்லாமே
இரட்டிப்பாக இருக்கலாம்

--- ஸ்டெல்லா தமிழரசி ர

கடவுளிடம் வேண்டிக்கொள்ளுங்கள்
கோயில் வாசலில்
செருப்புகளைப்போலவே
கழற்றிவிடப்பட்ட
மனிதர்களுக்காய்....

--- ம.தயா

மைக்கலேஞ்சலோ
-----------------------

நீயும் நானும்
சொர்கத்திலிருந்து தள்ளிவிடப்பட்டு
ஆகாய பந்தலில் மிதந்துக்கொண்டிருக்கிறோம்

கடற்கண்ணியாய் நீ தெரிந்தாய்
கடல் என்று நான் நினைத்து
துடுப்பென இருகைகள் உருவெடுத்து
துரத்துகிறேன் உன் கைகள் பிடிக்க

நீரற்ற கடலில்
நீந்திக்கொண்டிருக்கிறேன் நித்தினமும்
நிலம் புலப்படவில்லை விண்வெளியில்
நீச்சல் வசப்படவில்லை, காற்றில்
பறக்கும் கற்றிலாலான புகைக்கூண்டு நான்

காற்றை மிதித்து நடக்கிறேன்
காற்றை பிளந்து பறக்கிறேன்
காற்றை கிழித்து நீந்துகிறேன்
காற்றிலே தான் இருக்கிறேன் இன்னும்
ஒரு சொல் கூட நகரவில்லை

உலகிலுள்ள குழந்தை வானிலுள்ள நட்சத்திரங்களின்
இடைவெளியை அதன் சுண்டுவிரலைக் கொண்டு
அளந்துகொண்டிருந்தது
நமக்கான இடைவெளியின் கணக்கு
அக்குழந்தையின் சுண்டுவிரல்

எட்டிப்பிடிக்கும் தொலைவிலே நீ இருக்கிறாய்
எட்டிப்பிடிக்க முயன்றுகொண்டே இருக்கிறேன்
மைக்கலேஞ்சலோவின் ஓவியத்தில் இறந்தும்
விடுகிறேன்

--- இஜாஸ்

பறவைகளின் வாழ்விலிருக்கும் அலாதி
--------------------------------------

எப்பொழுதும் ஒருபறவை
அதன் அலகுகளால்
கொத்தி கிளறிவிடுவதோடு
அதன் காலால் பிறாண்டியும் விடுகிறது

ஆயினும் அதன்மீதான
அபிமானத்தால் எக்கணமும்
சினம் வந்து
வலிகொள்ள வைப்பதில்லை

பறவைகள் மீதான ஈர்ப்பில்
சில..நம்பிக்கைகள் சிறகடிக்கும்
இது போலவே
அமைதியை குலைக்காது
கிறக்கடிக்கும் அதன் மொழி
இத்தகைமைகள்
அதற்கே உரித்தான அம்சமாய்
வாய்த்து விடுவது கண்டு
ஏதேனும் ஒரு பறவையை
வாய் விட்டு வாழ்த்த நினைக்கிறது மனசு

அதன் இறகுகளிலிருக்கும்
மென்மையும் பரிசுத்தமும்
சலவை செய்து விட
என்னிலிருக்கும் அழுக்குகளெல்லாம்
துலக்கி விடுவதாய்
உயிர்பெறும் உள்ளுணர்வால்
எந்த பறவை கண்டாலும்
பெயர் சொல்ல முடியா பிரியம்
மனசின் மடிப்புகளில்
பசையாய் படிந்து கொள்கிறது

பகுத்தறிவுக்கு எட்டா
படிமங்களில் சலனமற்ற அதன் வானம்
என் இயலாமையை
பூமியில் இறக்கியும் விடுகிறது

ஓரிணையென உருகுதல்
தேவைக்கு அதிகமற்ற தேடல்
தன்னினத்தை பெருக்கும் ஆவாவில்
கூறுபோடா வாழ்வுடன் நளினங்கள் பிசகாமல்
நேர்த்தியாய் பயணிக்கும் பாங்கு

இயலுமாக இருந்தும்
மனிதனால் சாத்தியமாகா
பிறப்பின் விசித்திரம்,
எல்லைகளற்ற உலகம்,
அடிமைத்தனங்களற்ற வாழ்வு என.....,
கட்டுக்கோப்புகளை மிக எளிமையாக
அவ்வானம் முழுக்க
அலாதிகளால் வசப்படுத்தி வைத்திருக்கிறது.

--- ரோஷான் ஏ.ஜிப்ரி

வளையற் சிந்து
----------------

உள்ளத்திலே வருத்தமென்றால்
உடைந்துவிடு வாயா - மது
ஊற்றிக்குடிப் பாயா - உன்
உயிரைவிடு வாயா - தடை
உடைத்தெறிந்து முன்னேறிட
உழைத்துப்பிழைப் பாயா ?
கள்ளையுண்டால் போய்விடுமோ
கவலையெல்லாம் ஓடி - தாலி
கட்டியவள் வாடிக் - கண்
கலங்கிடுவாள் கூடிப் - பின்னும்
கட்டுப்பாடு இல்லையென்றால்
காலன்வரும் தேடி ...!!!

--- சியாமளா ராஜசேகர்

முகவரி தேடும்
அவள் முக வரிகளில்
தெரிவது
வயோதிகம்
மட்டுமல்ல...
வலிகளின்
அடையாளங்களும் தான்!
அந்த சுருக்கங்களின்
இடைவெளிகளில்
தெரிவது
அவள் கடந்துவந்த
சோதனைகளின்
தழும்புகள்!
அவள் முகத்தில் தெரிவது
அனுபவங்கள்
மட்டுமல்ல...
அறியாமையின் இழப்புகளும் தான்!
ஏமாற்றங்களின் அரிச்சுவடியாய்
வாழ்ந்து...
வறுமையின் வெறுமையில்
தனிமையின்
தவிப்பில்...
அவள் எதிர்பார்த்திருப்பது...
காலனையா? கண்ணாய் வளர்த்த மகனையா?
சுமந்த வயிற்றுக்கு
சோறிடவில்லையென்றாலும்...
சுமந்து சென்று இறுதிக் கடனை
செய்யவாவது
வருவானா எம்மகன்...?
ஏக்கத்தில் வாடுகிறது அவள்
உள்ளத்தில் உதிரப்பூக்கள்!
விழிகளில் மலர்ந்து கன்னங்களில் உதிர்கிறது
கண்ணீர்ப்பூக்கள்!

--- கார்த்திக்செல்வா

அறை எண் அறுபத்தாறு
---------------------------
மனநலம் பாதிப்பு உண்டு
என்பதை எப்படி அறிவீர்
பணவளம் கண்டுதானா
குணக்கேடு கொண்டுதானா?

மருத்துவர் இதனைக் கேட்டு
உருட்டு பெருவிழிகள் கூட்டி
விருட்டென எழுந்து நின்று
சுருட்டியே திரை விலக்கி

தொட்டியில் நிறைந்த நீரை
சட்டெனக் காலி செய்ய
கரண்டி குவளை வாளி இதில்
எதனை நீர் கை கொள்வீர்

பாதிப்பில்லா மனிதர் உடன்
சாதிப்பர் வாளியை எடுத்து
வாதமும் உண்டோ இதிலே
மாதவா எனப்பதில் கூற

பழியிலா வழியது ஆகும்
கழிவுக் குழாயை திறப்பது
அறை எண் அறுபத்தாறில்
உறைவிடம் உமக்கு உறுதி

வாளியைக் கொண்டு என்றே
நீங்களும் நினைத்தீர் என்றால்
அறை எண் அறுபத்தேழு
ஆங்கே கிடக்குது உமக்காய்.!

--- தா. ஜோசப் ஜூலியஸ்

ஒரு மழைக்கால

--------------------

வடக்க மலையோரம்
கருக்கலேறுச்சுனாவே
பணியாரம் சுட
படி படியா அரிசி அளந்து
மொறத்துல பொடைக்க
குந்திக்குமாம் கதிரேசனோட அம்மா

புளியஞ்சிமிர
ஒடச்சிக்கிட்டு தொரத்துனாலும்
மழயில நனஞ்சி
குதியாட்டம் போடுமாம் வேணியக்கா

தீனம்பய வூட்டுல கூட
கருப்பட்டிய இடிச்சி
சுக்குமல்லி காப்பி வைச்சி குடிப்பாங்களாம்

ஒழுவுங்கூர ஓட்டைக்கு நேரா
அடித்தேஞ்ச ஈயதட்டவச்சி
புடிச்சிக்கிட்டு நிப்போம்
நானும் எந்தம்பியும் மட்டும்.

--- சேலம் ராஜா

தாயின்கையில் புடைக்கபடுகிறது
குழந்தையின் பசி

--- விஜய்

பல்லிடுக்கு
ரொட்டித் துணுக்குகளில்
இன்னும் - வற்றாது
வாழ்கிறது பசி!

--- வினோதன்

பசுமை நினைவுகள்

--------------------

மண்வாசம் நுகர்ந்தபடி
மழையோடு வானவில் பிடிக்கையில்
கையோடு காணவில்லையென
கண்ணீர் நான் சிந்தியபோது
கட்டியணைத்து கண்துடைத்த
அம்மாவின் முந்தானையோடும்,

தொடுவானம் தீண்டும்படியான
தொலைதூர பயணங்களில்
அப்பா கூறும் அனைத்தையும்
ஆச்சரியத்தோடு கேட்டு செல்லும்
இன்று பயன்பாட்டில் இல்லாத
அந்த பழைய சைக்கிளோடும்

பரந்து கிடக்கின்றன என் வாழ்வின்
பசுமை நினைவுகள்...

--- செ. செல்வமணி செந்தில்

வசிய முகத்திரை வார்த்தைகள்
யதார்த்தமற்ற அலங்கார
மொழிகள் நம்மில் புதைந்த
பிரபஞ்ச ரகசியங்களை
ஆலிங்கன சுனையில்
அவசர அவசரமாய்
மொய்த்து சிறகுதிர்க்கிறோம்
பின் விசுவரூபம் கொள்கிறோம்
நம் நிழலை நாமே புதைக்கிறோம்
பின் விரல் துளாவுகிறோம்
சொப்பனம் களைந்து புனிதம் தேடி

--- (z) ஜபீர்

நீண்ட நாட்களுக்கு பிறகு
பள்ளி தோழியை சந்தித்த மகிழ்ச்சியில் கடந்த
காலங்களையும் ,
கடந்து வந்த பாதைகளையும்
சிறு தேநீர் கோப்பைகளுடன்
பகிர்ந்து கொண்டோம்......

படிக்கையில் கட்டிய நாடக வேசங்களில்
அதிகமாய் துரியோதனாகவும்,
இராவணனாகவும்,நம்பியாரராகவும்
வில்லன் வேசம் கட்டிய ஜானகிராமன்
இன்று நிறைய
அநாதை ஆசிரமங்களை நடத்தி
சிறந்த சமூக சேவகருக்கான விருதுகளுடன்
மதிப்புற வாழ்ந்துகொண்டிருக்கிறான்.......

நடிக்கும் நாடகங்களிளெல்லாம்
விலைமாது கதாபாத்திரமாகவே
அமைந்து விடுகிற சீதாலட்சுமிக்கு
இன்று அரசாங்க உயர் பதவியிலுள்ள
கூட படிச்ச சுந்தரராமனுடன்
திருமணம் முடிந்து
மிகுந்த செல்வாக்குடன் பேரதிஷ்டகார
சீதாபிராட்டியாகவே வாழ்கிறாள்.......

அனைத்து நாடகங்களிலும்
பிச்சைகார வேசம் கட்டிய பிச்சைமுத்துதான்
இன்று சிட்டிக்குள்
நாலு நகைகடைகளுக்கு சொந்தக்காரன்........

கூலிக்கு மாறடிக்கும் தொழிலாளியாய்
வேசம் கட்டிய மாறன்தான்
இன்று அரசாங்கமே சலியூட் அடித்து
வியக்கும்படியான தொழிலதிபர்...

எப்போதும் மக்கு வேசம் கட்டுவாளே
கடைசி பென்ஞ்ச் கார்த்திகா
இன்று நாம் படித்த பள்ளியிலே
பணி புரிகிறாள் ஆசிரியராக .......

நல்ல வாட்டசாட்டமாக இருந்ததாலே
எந்த நாடகமென்றாலும் கார்த்திகேயனுக்கு
காவல் அதிகாரி வேடம்தான்.....
இன்று பொறுக்கி, பிக்பாக்கெட்,
கஞ்சா வியாபாரின்னி அவன் வாழ்க்கையே திசைமாறி
போச்சி....

அப்போதே வரதட்சனையையும், மதுக்கடைகளையையும்
எதிர்த்து போராடும் சமூக ஆர்வலனாக
புரட்சி வேசம் கட்டிய கல்யாண சுந்தரம் இன்னும்
கல்யாணம் ஆகாத
முதிர் கண்ணன் கோலத்தில்
மதுக்கடையே மார்க்கமென
மயங்கி கிடக்கிறான்.......

பாவம் கல்யாணி......!
கல்யாண பொண்ணு வேசம்ன்னாலே
கண கச்சிதமாய் பொருந்தி போன
அவள் இன்னமும் முதிர்கன்னிதான்...

கடைசியாய்
அடிக்கடி ராமன் வேசம் கட்டிய நானும்
சீதை வேசம் கட்டிய நீயும்
தேச துர் நாற்றங்களாய்
கால சுழற்சியில் சந்திக்க கூடாத இடத்தில்
சந்தித்து கொண்டோம்!......
விலைமாதர் கூட்டத்தில் உன்னையும்
வாடிக்கையாளன் கூட்டத்தில் என்னையும்......

எல்லாம் பகிர்ந்து முடித்த நேரத்தில்
காலியான தேநீர் கோப்பை
கண்ணீரால் நிரம்பியிருந்தது.........

--- சுயம்பு

அவளறியாமலே
பாரதியின் கவிதைகளால்
வளர்க்கப்பட்டவள் அவள்!!

ஒளிபடைத்த கண்கள்!!
ஓடிப்போவாள் என்றார்கள்.

உறுதி கொண்ட நெஞ்சினள்!!
கன்னியல்ல கல்லு என்றார்கள்.

களி படைத்த மொழியினள்!!
காதலிக்கலாம் வா என்றார்கள்.

தெளிவுபெற்ற மதியினள்!!
தெம்மாங்கு , திமிர் என்றார்கள்.

சிறுமை கண்டு பொங்குபவள்!!
சி.எம் ..? என சிரித்தார்கள்.

எளிமை கண்டு இரங்குபவள்!!
என்னா நடிப்பு .. எள்ளி நகைத்தார்கள்..

எல்லாம் அறிந்தும் எல்லாரிடமும்
#அன்பாயிருந்தாள்..,அவள்.... அவளாயிருந்தாள்....
அக்கவிதையைப் படிக்கும்வரை..!

அகவை ஐம்பதைக் கடந்த
ஆண் ஒருவனின் பயண நேரத்தில்...
அருகில் அமர்ந்த ஒரு பெண்ணை
அளவிட்டு எழுதப்பட்டிருந்தது அது..!

மனம் ஒருவனை மணந்த பிறகு
மங்கையர்க்கு., மற்றவரின்
மார்பும் தொடையும் தொடுதலும்
மரக்கட்டையின் ஸ்பரிசம்தானே..!!

அறியாத அக்கீழோனின்
அரையாடை சொல்லியதாம்.. இரவெல்லாம்
அவள் வாடிக்கையாளர்களிடம்
வதங்கி வந்தாளென்று!!!

சகோதர வாஞ்சையுடன் சகஜமாக
அமர்ந்திருக்கலாம் அப்பெண்..
ஆண்களை சக மனிதமாகப் பார்க்கும்
கண்ணியமிருக்கலாம் அப்பெண்ணிடம்...!!

எதையும் சிந்திக்காமல்
ஏனோதானோவென இயம்பிய அக்
கவிதையைப் படித்ததிலிருந்து
அன்றாட பயணம் மேற்கொள்ளும்
#அவளுக்கு..,

அருகில் ஆண் அமர்ந்தாலே
அருவருக்கிறது மனம்.!!

--- உஷாகாந்தன் (எ) விடியலரசி

சாலையில்
எதிரெதிர் புறமாய் நிற்கும்
பள்ளிச் சிறுமியும்,
பார்வையற்ற முதியவரும்
ஒரே நேரத்தில் சாலையைக் கடக்க
ஆயத்தமாய் உள்ளனர்.
சாலையின் மையத்தில்
நிற்கும் எனதிரு கால்களும்
கரங்களும் அசையாதிருக்க,
ஒற்றை இதயம் மட்டும்
பறக்கும் வாகனங்களைக் கண்டு
பலநூறு சிறகுகளை
படபடத்தவாறு அடித்துக் கொண்டிருக்கிறது.

--- றாம் சங்கரி

மாயக்கண்
-------------

ஒரே முகம் கொண்டிருக்கிறது
உண்மையும் பொய்யும்..!
விழிகளுக்கு புலப்படாத அகம்
நல்லவர் வஞ்சகரை
அடையாளம் காட்டுவதில்லை..!

அன்பொழுகும் வேடத்தில்
காரியம் சாதிக்கும்
நயவஞ்சக கரையான்கள்
நிம்மதியை அரிக்கும்
கொடுமைகளோடு
உயிரையும் அரித்துப்போகிறது..!

இதழ் ஏந்தும்
புன்னகையில் எல்லாம்
கொடும் விடங்கள்
அமுதத்தில் தோய்க்கப்பட்டு
அழகாய்த்தான் மின்னுகிறது..!

அசந்த சந்தர்ப்பங்களில்
படமெடுக்கிறது சர்ப்பமாய்
விடத்தினை
உயிர்மூச்சின்
அடி ஆழம் வரையிலும் செலுத்தி
ஆனந்த தாண்டவமிடுகிறது
அரிதாரங்கள்..!

நம்ப வைத்து கழுத்தறுக்கும்
துரோக பெருக்கங்கள்
எல்லை கடந்தவைகளாய்..!

பசுத்தோல் போர்த்தும்
குரோத புலிகளை ஊடுருவ
புறக்கண்கள் சக்தியற்றதாய்..!

அரிதார கோலத்தின்
சாயங்களை தோலுரித்து
நிதர்சனங்களை உணர்த்தும்
மாயக்கண் ஒன்று வேண்டும்
எதிர்காலங்களாவது
இன்னல்கள் அற்றிருக்க ..!
எந்த கடவுள் அருளுவார்..?

--- சொ.சாந்தி

பழைய பேருந்து போல்
ஆடி அசைந்து தான்
வருகின்றதிந்த புன்னகை..

உதடுகளைச் சேர்வதற்குள்
மேடு பள்ளங்களில்
கொஞ்சம் அடிபட்டுப்
போய் விடுகின்றது...

எப்படியோசரி செய்து
பொருத்திக் கொள்கிறேன்...

அது என்னைப்
பார்ப்பவரை
மகிழ்வூட்டி
பயணப்பட வைத்து
விடுகின்றது..

என்னையும்
அப்படியே
கடத்திக் கொண்டு
புதியதொரு நாளில்
சேர்த்து விடுகின்றது....!!

--- மீனு

கனவுள் புகுந்த கவிஞன்
-------------------------

நேற்றிரவு கனவுள் கவிஞன்
புகுந்துவிட்டான்
நீர்மேல் சிறு தூரலாய்
கவி விதைகளைத் தூவுகிறான்.

விழித்தெழுந்து கவிகளை
மீட்டெடுக்க முயல்கிறேன்
வெறுமையின் பிம்பங்கள்
தோன்றி மறைகிறது.

குழந்தைகளின்
பள்ளிச் செல்லும் பரபரப்பு..
மனைவியின் சமையல்
பரபரப்புகளுக்கிடையில்
அரைபட்டுக் கூலாகிறது
கவியின் நினைவு.

கவிஞனிடம் கவிவேண்டுகிறேன்
உன் வேலைகளை
முடித்துவிட்டு வா..என்கிறான்.

சிறுமுள்ளும் பெருமுள்ளும்
ஒன்றையொன்று முந்தியோட
அந்திமம் எழுந்தபின்
பணி முடித்து விரைகிறேன்.

என் இயலாமையின்
சுவர்கள் மீது ஏறிநின்று சிரித்தபடி
மறுபுறம் குதிக்கிறான் கவிஞன்.

யாராவது
அவனைக்கண்டால் சொல்லுங்கள்
வெற்றுக்காகிதத்துடன்
காத்திருக்கும் என் மடமையை.

--- குமரேசன் கிருஷ்ணன்

வெங்கல சொம்பாட்டம்
வெலக்கி வச்ச உன் முகம்
சுருள் சுருளான
முடியிலசடை பின்னி..

சட மேல செம்பருத்தி
பூ சொருகி...

கண்ந்தங்கிச் சேலை கட்டி
கால் நிறைய
கொலுசு போட்டு...

வரப்பு மேல நீ நடந்து வந்த
வயல் எல்லாம் பூ பூக்கும்
வண்டு வந்து தேன் குடிக்கும்

இன்னைக்கி
சுருக்கம் விழுந்த தேகமும்
கை தடியுமாய்
உன்ன பாக்கையில

பழைய காதலும்
கொஞ்சம் வெட்கமும்...

இது தவிற
வேறு என்ன தோனும் எனக்கு...

--- ப. செந்தில் முருகன்

குதிரைகள்
-----------
தவழும் வயதில்
உறக்கத்திலும் பிரியாத
தாத்தா வாங்கித்தந்த
அருபது ரூபாய் நெகிழிக் குதிரை.

தம்பியை தள்ளச் சொல்லி
முன்னும், பின்னும்
டொடக் டொடக்கென்று
சாய்ந்து விளையாடிய மரக்குதிரை.

அண்ணா சாலையின்
பச்சை சமிக்ஞைக்கு
முதலாய் சீறிப்பாயும்
அப்பாவின் இரும்புக் குதிரை.

பள்ளிக்கூட உணவு இடைவேளையில்
வேகமாக உண்ட உணவு செரிக்க
நண்பனின் முதுகில்
தாண்டிய பச்சைக் குதிரை.

அம்மாவின் முந்தானையில்
ஒளிந்து கொண்டு ரசித்த,
அம்மன் கோவில் திருவிழாவில்
ஆடிய பொய்க்கால் குதிரை.

இவையனைத்தும் தந்த
நெகிழ்வான தருணங்களை,
ஏனோ இன்று கடற்கரை மணலில்
என்னை சுமந்து சென்ற
மெய்யான குதிரை தரவில்லை

--- சகி

பலவீனத்தின் பிடியில்
கீழே விழுந்து
எலும்புகள் வெடித்திருந்தன..

படுக்கையில்
அசையாமலே கிடந்து
அசைபோட்டுக் கொண்டிருந்தது
பழுத்த மனம்

பார்த்தெடுக்க
பக்கத்தில் பணம் கொடுத்த
பலர் உண்டு

பார்த்துப் பார்த்து வளர்த்த
பிள்ளைகள்
பார்த்துப் போக மட்டும்
ஒரு வார விடுமுறையில்
வந்து சென்றனர்

உடல் வலி
உள்ளத்து வலியைவிட
பெரிதாயில்லை

அவரவர் காலில்
நிற்க இயலாதபோது
உயிர் வெறுப்பில்
வேண்டுவதெல்லாம்
இன்னும் ஏன்
விட்டுவைத்திருக்கிறாய்
இறைவா என்பதாகிறது

--- ராஜா ராஜ்

துரோகியின் குற்றச்சாட்டுகளுக்குள் ஒளிந்திருக்கும்
உண்மையின் சிறுதுளிக்குள்
மூழ்கி மூர்ச்சையடைகிறாய் நீ

பின் நேர்மையின் தடயங்களைச் சிறு காகிதப்
படகாக்கினாய்
பின் இக்கட்டான தருணங்களில் அணிந்திருந்த
நம்பிக்கைகளை துடுப்பாக்கினாய்
பின் ஆரம்பகால எதிர்பார்ப்புகளற்ற உழைப்பை
மிதக்கும் ஒரு மரமாக்கிப் படகிலேறினாய்

இது கவிழ்ந்து விடக்கூடாதே என்று
உன் மனைவியின் கண்ணீரைக்கொண்டு
பிரார்த்தித்தாய்
எப்படியாவது கரைசேர வேண்டுமே என்று
உன் குழந்தைகளின் நம்பிக்கைகளைக் கொண்டு
இறைஞ்சினாய்
சலனப்பட்ட தருணங்கள் ஒரு திமிங்கலமாக
உருவெடுத்து
மூழ்கடித்துவிடுமோ என்று திகிலுடனே படகைச்
செலுத்திக் கொண்டிருக்கிறாய்

இந்த நெருக்கடியில் எடுத்துக்கொண்ட சபதங்களும்
இந்த வழுக்கலில் கற்றுக்கொண்ட பாடங்களும்
இனியாவது புத்தி புகட்டட்டுமென
காற்றும் கடலும் கரைசேர்க்கட்டும் உன்னை என்றேன்

--- நிஷாமன்சூர்

காட்டை
விதைகளாய்
ஒளித்து வைத்துள்ளது மரம்...

--- கோ.சிவராஜன்

நெடுஞ்சாலை
வேகத்தடையை கடக்கும்போது.....
தவறாக அழுத்தப்பட்ட
கைப்பேசி எண்கள்
சரி செய்யப்படுகின்றன..
ஏற்படும் சிறிய இடப்பெயர்ச்சியில்
இடைவெளிகள் நிரப்ப படுகின்றன..
வாய்க்கு வெளியே பருகப்பட்ட நீர்
சரியாக பருகப்படுகிறது..
ஆனால்....
வேகத்தடை அருகே
கையேந்தி நிற்கும் கைகளுக்கான
நாணயங்கள் எங்கோ ஒரு
கடையில் சாக்லேட்டுகளாக
மாறிவிடுவதை
சரி செய்ய முடிவதில்லை..
அந்த சாக்லேட்டைத்தான்
ரசித்து
ருசிக்கின்றீர்கள்.

--- தோழன் பிரபா

தினமும்
மரத்தை இலைகள் அசைத்துப் பார்க்கின்றன
ஒரு நாள்
மரம் விழுந்து காட்டியது.

அங்கும்,இங்கும்
அதிலும்,இதிலும் தாவி
மரத்தைப் பரப்புகிறது குரங்கு.

மழை விட்டதும்
இலைகளில் தங்கியிருக்கும்
இன்னொரு மழை பெய்யத்தான்
உம்மா முழங்குகிறாள்.

--- அகமது ஃபைசல்

முடிவுறா கனா
----------------
ஒரு நதியின் புரட்டலில்
அலையும் கூழாங்கற்களின் சப்தத்தில்
மீன் விழிக்கிறது,
முடிவுறாத கனாவைப் பற்றிய
புலம்பல்களை முனுமுனுக்கிறது,
ஒலியை நீரமிழ்த்துகிறது,
விசை கொண்டு நீந்தி
சதை மலையை நகர்த்தி
செவியை விரிக்கிறேன்,
கனா சொல்ல 'அ'னா போடுகிறது மீன்,
ஒரு மழை
ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும்
குளத்தை எழுப்புவது போல்
மொட்டை மாடியிலுறங்கும்
என்னை எழுப்புகிறது மழை,
என் கனாவையும்
மீன் கனாவையும்
ஒரே நேரத்தில் தொலைத்து விழிக்கிறேன்....

--- கார்த்திக் முருகானந்தம்

தன் அறுந்த வாழ்வை
அன்றாடம்
இணைக்க முனைகிறான்
செருப்பு தைக்கும்
அந்த தெரு முனை
தொண்டுக் கிழவன்

--- துருவன் பாலா

வெட்டியான் தொட்டும்
மௌனமாய்
உயர்சாதிப் பிணம்!!

--- ஜீவா

கரும்பலகையில்
எழுதிய தமிழ்
தவறான எழுத்தைவிட

சுவற்றில் எழுதிய
சிறுநீர் எழுத்துக்கள்
அழகாய்...
அடி வாங்கித்தந்தன....

கொட்டை எழுத்துக்களில்
தலைப்பு செய்தியாயின
என் பெயர்

தெருக்களில் நான்
தீவிரவாதியானேன்
தூசு தட்டுங்கள்...
இதயத்தில் நீங்கள்
நானாய் இருக்கக்கூடும்.......

--- வீ.கதிரவன்

நதிக்கரை நாகரீகத்தின்
சாட்சியென கண்டெடுத்தோம்
முதுமக்கள் தாழியும்
சுடு மண்பானைகளையும்
கண்மூடித்தனமான
ஆட்சியாளர்கள் காலம்
மண்மூடிப் போன
இன்னுமொரு ஆயிரம்
ஆண்டுகள் கழித்து
ஆற்றங்கரையோரத்தில்
அகப்படாமலா போய்விடும்
இவர்களின் அநாகரீகத்தின் சாட்சியென
நாலு கொக்ககோலா
பெப்சி போத்தல்கள்.

--- வைகை சுரேஷ்

ஓடும் நீரில் பாயுது மனது
---------------------------
உள்ளம் குளிருது
உடலும் குளிருது
ஓடும் நீரைப் பார்க்கையிலே !

மூழ்கத் தோணுது
மூச்சும் விரையுது
உடலும் முழுதாய் வேர்க்கையிலே !

பசுமை நிறையுது
பச்சைத் தெரியுது
தோட்ட மெல்லாம் காண்கையிலே !

மரங்கள் மகிழுது
மண்ணில் திகழுது
மகிழ்ச்சி மனதில் தேங்கையிலே !

நீரும் ஓடுது
நினைவும் ஓடுது
நெஞ்சில் அலைகள் ஆழ்கையிலே !

மனதும் நிறையுது
மாற்றம் தெரியுது
இயற்கை எம்மைச் சூழ்கையிலே !

தென்றல் வீசுது
தெளிவாய்ப் பேசுது
திருப்பம் பலவும் வருகையிலே !

மணமும் பரவுது
மலரின் உறவிது
மண்ணும் நமக்குத் தருகையிலே !

--- அ.முத்துசாமி ,தாரமங்கலம்

வாழ்க்கையின் கதைகளை
எழுதத் துவங்குகையில்
வெறுண்டோடுகின்றன
எழுத்துக்கள்..

புறமுதுகிடும்..
உண்மையின் அச்சத்திற்குத்தான்
ரகசியங்கள் என்ற
பட்டங்கள்..

சரணடைந்த உண்மைகளை
ஒதுக்கி விட்டுத்தான்..
வார்த்தை மந்தைகளை
மேய்த்துக் கொண்டிருக்கிறேன்
வாழ்க்கையின் கதைகளில்...

எனினும் எச்சில் ஊறிட
குதறக் காத்திருக்கும்
ஓநாய்களைப் பற்றிய
அச்சங்களுமே
பெருஞ்சுமையாக...

--- சிந்தா

இந்த பேருந்தின்
ஜன்னலோர சிலிக்கான் கண்ணாடியில்
தென்றலாய் பரவிக் கிடக்கிறது
அவள் முகம்.
தாழிட்ட மனதில்
நுழைதல் தோற்றுப் போக - அவனுள்
ஓராயிரம் பூதம் கிளம்பியதை
மீண்டும் மீண்டும்
ஊர்ஜிதப் படுத்துகிறது
ஓட்டுனர்கை
காற்று ஒலிப்பான்

--- கற்குவேல் பா

நெனப்போட நிப்பவ
----------------------

ஒழக்க புடிச்சி
நெல்ல பிரிச்சவ..
கணக்கா வடிச்சி
புள்ள வளத்தவ...

புளி நசுக்கி..
பொடவ வாங்கி
பேத்திக்குப் போத்தி
ஒறவக் காத்தவ...

வெத்தலத் துப்பிய
வேக்காட்டு தடத்துல..
கதையாக் கொட்டும்
தொணையா நடந்தவ...

கரும்பு சோக
குடுசைக்கு தோக..
நிலா வந்து போக
கூர குட்டி வானமாக..

உடும்பு சிரிப்பு
காத்தோட கலக்க...
அடுப்பு நெருப்பும்
சோத்தோட மணக்கும்..

நெத்தி சாம்பல
சொத்தா நெனச்சவள
பெத்த ஆம்பள எவனும்
செத்தும் விரும்புல...

--- காதலாரா

கைகளில்
மறைத்துக்
கொண்டிருப்பதைக்
கேட்கிறாள்.
அதில்
என்னவாயிருக்கும்.?
யோசித்துத் தோற்றபின்
என்னவோயிருக்கட்டும்
என்று நகர எத்தனிக்கையில்
ஒன்னுமில்லையே
எனக் கைவிரிக்கிறாள்...
அது வரையில்
அவள்கைகளில்
ஒன்றுமில்லாததாய்
இருந்தது
இதோ
அண்டசராசரமெங்கிலும்
வியாபித்திருப்பது
புரிகிறது...
குழந்தை தானே
அவளுக்குப்
புரிய
நாளாகும்.
அது வரை
பூரித்துச்
சிரிப்பதாய்
சிரித்துவை
என்கிறது
அநுபவம்.

--- ராஜன். எஸ்வீ

விதைக்கப்பட்ட நெல்
பெரிதாய் வளர்ந்து நிற்கின்றது
பயிர்க்கடன்

--- மு_சாத்தப்பன்

காற்றில் கலந்துள்ள
என் குறத்தியரின் முத்தத் துளிகளை
என் கை ரேகையினுள்
ஆழ பதிக்க நினைக்கும்
கோமாளி நான்..
என் பொன்னான நெஞ்சிற்குள்
அவளின் கால் தடங்கள்
அழியாத சித்திரங்களாய் பதிந்து
யாரும் அறிந்திடாத வண்ணம்
தனிமையில் மெருகேற்றிக்கொண்டிருக்கும் கோமாளி நான்..
துன்பக்கடலின் எல்லையை அறிந்திராத சிரிப்புடலின்
தலைவனாகிய நான்
என் குறத்தியரின் கூந்தலுக்குள் தஞ்சமடைந்து
உறக்கத்தின் இனிமையினை
இசைத்து,
மக்களின் துன்பத்தை அரிதாரமிட்டு இசையால்
மீட்டெடுக்கும் கோமாளி நான்..
பூத உடலின் வேர்வையினை
ஊசியினால் கோர்த்து
அதில் கோமாளியின் குருதியினை கலந்து நான் என்
தலைவிக்கு பூச்சூட
இந்நிலத்தின் மாந்தர்கள்
எங்களை புதிய உலகத்தின்
அரிதாரம் பூசிய கோமாளியாய் பிரசவிப்பார்கள்...

--- சந்தோஷ் குமார்

முட்டி மோதி
மீண்டும் கடலாகி
விடுகிறது கடல்....

--- தோழன்

விலை அதிகம்
ஆசை துற
அழகான புத்தர் சிலை.

போதிமரத்தின் கிளையில் செய்யலாம்
துப்பாக்கி கட்டை.

கூட்டில் குஞ்சுகள்
பசியில் ஏறும் பாம்பு
பாவம் போதிமரம்.

தியானத்தில் புத்தன்
திருடப்பட்டது ஞானம்
இந்து மதம்.

போதி மரத்தடியில்
சித்தார்த்தனை கொன்றான் புத்தன்.

போதிமரத்தில் பழுத்த
ஒரே கனி சாக்கிய முனி.

--- பி.கே.சாமி

சில்லறை மீன் வியாபாரி
விபத்துக்குள்ளாகிக் கிடக்கின்றான்
கூடையிலிருந்து சிதறிய மீன்கள்
அவன் குருதியில் நீந்திக்களிக்கின்றது.
பாவம் வியாபாரிதான்
காற்றுகுடித்து மூர்ச்சையானான்..
தவிர
வண்ணமீன்கள் சுற்றும் தட்டைப்பேழைக்குள்
நான் என் சைக்கிள் பெல்லை அடித்தபடி
கவனமாய் நீந்திவந்தேன் என் வீட்டிற்கு,,,

--- நிலாகண்ணன்

அவ்வளவுதான்,
இனி எடுத்துச் செல்லுங்கள்.
கூடம் தயாராகிக் கொண்டிருந்தது.
கண்டவுடன் எழுந்து நிற்போர்
இன்று அமர்ந்து வேடிக்கை பார்த்தனர்.

கண்கள் குழியில் கால்படி அரிசியிடலாம்
நோய் கொடுத்த சிறந்த பரிசு.
காடு மேடு கண்டு வந்த கால்கள்
மூளை நரம்பால் அசைவற்று...
அதற்றிய குரல் இன்று
அருகில் நிற்பவர்கும் எட்டவில்லை.

தெருமுனை திருமபிய வெள்ளை வண்டி கந்தன் ஓடி
கதவு திறந்தான்.....
இன்று நேற்றா? ஐம்பது வருடமாய்
காத்திருந்து திறந்து வணங்கியவனல்லவா..
கண் மெல்ல கந்தனை தேடி
நீர் கோர்த்து கொண்டது.

பித்தளை செம்பில்துளசியோடு ,
கிணற்று நீரும் கங்கையும் கலந்து
கட்டிலின் அருகே வைக்கப்பட
"பத்திரமா கிடத்துங்க,
இன்னும் நாள் வரல போல"...
என்ற ஜாம்பவான் நிரந்தரமோ?

--- ஸ்ரீவித்யா ராமச்சந்திரன்

வீதிகளில் நடக்க அனுமதிக்காத
மேலத்தெரு சாதீப்பிணங்களை
பறையிசை எக்காளமிட்டு கூட்டிச்செல்கிறது
இடுகாட்டுக்கு

--- போஸ் பிரபு

உன்னிடம் யோசித்துப் பேசத் தெரியவில்லை எனக்கு

யோசிக்காமல் கொட்டிவிட்ட சொற்களுக்காய்
மன்னிப்பு கோராமலிருக்கவும் முடியவில்லை

இப்போதெல்லாம் நான் எது செய்தாலும் குற்றம்
காண்கிறாயே அதெப்படி?

விலக நினைத்து விட்ட பிறகு
பூச்சொரிந்தாலும் உனக்குப்
புண்படத்தான் செய்யும்

பழகத்தான் வேண்டும்
யோசித்துப் பேசுவதற்கில்லாவிட்டாலும்
அவமானங்களிலிருந்து
மீண்டெழுவது எப்படி என்பதையாவது.

--- யாழினி முனுசாமி

தீராத நீர்மையின் வடிவத்தை இட்டு நிரப்பிக் கொண்டு
அவன் உடலொழுகப் பயணிக்கிறான்
கொஞ்சம் ஆசுவாசமாய் இருக்கிறது நீருள்ள மேடுகள்
தவிர அவன் மனமெங்கும் குற்றம் புழுங்கும் கணங்களில்
ஆழத்துளைக்கும் இராட்சத எந்திரம் நோண்டி விட்டுப்
போகிறது
இருந்தும்
பேரன்பின் துணை நாணயத்தைச் சுண்டித்தான் அன்பு
தருகிறது
தலை விழுந்த போது கிட்டாத பூப் பக்கம்
யாருக்கென்று தான் அடித்துக் கொள்கிறது நெஞ்சம்

--- கார்த்திகேயன் மாகா

என்னை அடையாளப்படுத்தியிக்கிறது
நீ என்ற ஒற்றைப் புள்ளி......
பெரும் வரத்தினை
குட்டி போன்சாய் மரத்திடம்
பெற்றதாய்
சேமித்துக் கொள்கிறேன்......
இப்போது நான்-
தேவதையிடம் வரம் வாங்கிய
ராஜகுமாரனாய்
குதித்துக் கொண்டிருக்கிறேன்.......
அவள் கொடுத்த அகராதியில்-
என் கவிதைகள்
மொழி பெயர்க்கப்படுகிறது..........

--- பொள்ளாச்சி முருகானந்தம்

பிளாட்பாரத்தில் சுருண்டு
கிடக்கும் சிறுமி
நட்சத்திரத்தை பறிக்க
கைநீட்டி அம்மாவிடம்
அடம் பிடிக்கிறாள்
ஒவ்வொரு நாளும்
அவளின் கண்களில்
வெவ்வேறு நிலாக்கள்
மிதக்கின்றன
நிலா வராத நாளில்
சிறுமி நிரந்தரமாக
உறங்கிப்போகிறாள்
தற்போது தினமும் வானத்தில் நிலாவுடன்
ஒரு நட்சத்திரம்
சிறுமியின்
புன்னகையை உதிர்க்கிறது

--- சே தண்டபாணி தென்றல்

நேற்றைய பொழுதின் பிற்பகுதியில்
பெய்தமழையின் சிறுமிச்சம்
ஆடை களைதலோடு
காய்ந்துபோனது.

இன்றைய மேகத்தின்
கரும்பூச்சை நம்பித்தான்
மழையாடை கொடுத்தனுப்பினாள்
மனைவி.

காற்று துரத்தியடித்து
வெள்ளையடித்துக்கொண்டது
மேகம்.
இனி
மனைவியின் கோபத்தை
மழைமேகமும் சந்திக்கும்.

--- ஜெய்ராஜ்

அந்திக் கருக்கலில்
காத்திருக்கிறேன்...
வந்து சென்றாய்
ஒரு மின்னலின் வெட்டு போல் !
இடியென முழக்கமிட்டு
பின்தொடர்ந்தேன் ...
மழையாய் என் நெஞ்சைக்
குளிரவைத்தாய் !
முழுக்க நனைந்தும்
தணலாய்த் தகித்த
என் உடலெங்கும்
பரவிக்கிடந்தது ....
தேடலின் தீக்கொழுந்து !
அப்போது அந்தக்
கீழ்வானமும் சிவந்திருந்தது !

--- கா.ந.கல்யாணசுந்தரம்

எளிய உதிர்த்தல்
------------------
சாலையில் அடிபட்டுக் கிடந்த
குஞ்சுப்புறாவைச் சுற்றிக்
காக்கைகள்
பரபரத்துக்கொண்டேடேயிருக்கின்றன.
ஈக்கள் மொய்த்து
இரங்கலை வெளிப்படுத்தியதுபோக
எறும்புகள்
ஊர்வலங்களால்
உடலடக்கம் செய்துகொண்டிருக்கின்றன
எரிக்கும் வெயில்
பிண்டத்தைச் சிதைக்கும் முயற்சியில்
ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது
அடையாளங்கள்
சற்றும் மாறுவதற்குமுன்
இழந்த பறவையின் கூட்டிலிருந்து
அவசரவசரமாய் ஓர்
ஒற்றை இறகு உதிர
உதிர்த்தலுக்குப்
பழக்கப்பட்டுவிடுகிறது உலகம்

--- பிறைநிலா ஸ்ரீனிவாசபிரபு

பெற்றதின் பார்வை
பெரும் பாரமாய் மாறும்போதுதான்
பெற்ற பாரமே பெரும் பாரமாய்த் தெரிகிறது

--- கண்ணன் புலமி

மீன்விற்ற காசு
அதிக நாற்றம் வீசுகிறது
குடிகார வியாபாரி

--- பட்டுக்கோட்டை பெ மூர்த்தி

அகன்று பரந்த
பொட்டல் மணற் பரப்பில்
காற்றும் மழைத்துளியும்
புழுதியைக் களைத்தும் நனைத்தும்
ஓர் மரத்தை வரைந்து
முடித்திருந்த வேளையில்
எதிர்பாராமல்
ஓர் பறவை வந்தமர்ந்து
எச்சமிட்டு விதைத்து செல்கிறது
நாளைய விருட்சத்தை
வரையப்பட்ட மரத்தின் கிளையில்.

காற்றும் மழைத்துளியும்
இன்னுமொரு மரத்தை வரைய
ஆயத்தமாகிவிட்டன
எச்சமிட்ட பறவையை எதிர்பார்த்து

--- மு. சுகுமாறன்

மௌனமான நேரம்
--------------------
தூசு தட்டி அனுப்பிய இருவில் வரையப்படுகிறேன்
வெளிச்சம் வரைந்த ஓவியமாய்
அதீத மௌனம் கலந்த உற்சாகத்தில் மேலும் மேலும்
மெருகேறும்போது இரவு அழகாகியது
ஒரு கருப்பட்டையில் ஒட்டப்பட்டு
வருகை அறையில்
மாட்டப்பட்டதும் வீடு கவிதையானது
கும்மியிருட்டு வானத்திலிருந்து
பூமியை அளவெடுத்த விழிப்
பாதிப்பில் காதல் நகல் எடுக்கும் காற்று வெளி
கலவரமானது

--- கா.இலட்சுமணன்

ஓடுடைத்துப் போன பின்பும்
அடைகாக்கிறாய்
உன் காதலை!

அறியாததல்ல அகத்தின் வலி
உனதென எப்போதும்
நானில்லை!

நிறமிழந்த பின்னும்
கிழிந்த மனதை அப்படியேதான்
உடுத்தித் தொலைக்கிறேன்..!

உனது கண்கட்டு வித்தைகளில்
நான் கைதேர்ந்தவள் அல்ல!

உனது கூடு வேறு
எனது கூடு வேறு
இளைப்பாறிக் கொள்ளவும்
இம்மையில் வழியில்லை!

இருக்கட்டும்
நீ உடைக்காத ஓட்டினை
இமையாய் காவல் காக்கும்

பறவையாகட்டும் என் காதல்!

--- முகில் நிலா தமிழ்

லிமரைக்கூ
-----------
நாடு பார்க்கும் ஆசையில் ஓடி
நாளும் பொழுதும் மக்கள் வரிப்பணத்தை
நாசம் செய்வதென்ன மோடி..!

--- முகம்மட் அஸாத்

வேதா - பூவிழி.... க(விதைகள்)டிதங்கள்
------------------------------------------
ஒரு பொழுதைப் பிடித்து
பேழையில் அடைத்த நான்
காட்சிகளை எனக்கு மட்டும்
பிடித்தவாறு மாற்றிக்கொண்டேன்.

பாலைவனத்தின் பகல் நிலவாய்
தீயிட்டு எரியும் கனவுக்கு
நீரூற்றும் உன் நினைவுகள்
உள்ளூரத் தழுவியும் கொள்கிறது.

புலிகளின் கூட்டமொன்று
எதிர்படும் பொழுதுகளிலெல்லாம்
உனது நலம் கேட்டுச் செல்ல, அதற்கு
நலம் தான் என்று நானும் கூறிவிடுகிறேன்.

அந்த இருளின் போர்வை என்பது
என் மனதிற்கு ஏற்றாற்போல்
வண்ணங்களை மாற்றிக் கொள்வது தான்
என்னைப் பொறுத்தவரை பெருமகிழ்ச்சி.

--- Pearl Sys ( முத்து )

வானம் கூட
முகம் பார்க்கிறது
தேங்கும் நீரில்.

--- முத்து.விஜயகுமார்

கையில் சோறு
காணாமல் போகிறது
குருவிகளின் பசி

--- நீமா

வீட்டு முற்றத்தில்
அம்மாவின் கால் பட்டதும்
மூச்சுக்காற்றை பெரிதாய்
தரையில்
ஊதி புழுதியினை
கிளப்பியபடி
எழுந்து நின்று
சிலிர்ப்பொன்றை
தன் மேனியெங்கும்
படரவிட்டு
நெட்டிமுறித்து உடலினை
நீவி விட்டவாறு
இடவலமாய் தலையாட்டிக்கொண்டு
ம்மா என்கிறது
என் வீட்டு பசு மாடு

--- மகேஷ் சிபி

தெளிந்த கிணற்றுநீரில்
மீனோடு விளையாடுகிறது..
வானம்!

சதுர கிணற்றுக்குள்
வட்டம் வரைகிறது..
விழுந்த சிறு கல்!

பாசிபடிந்த கிணறு
தெளியாமலிருக்கிறது...
மனதில் சந்தேகம்!

--- க. அய்யப்பன் கவிதோழன்

அது பாதுகாப்பற்ற
நாற்பது அடி ஆழமான கிணறு..,

இருபது அடி வரையும்
நீர் ஊறியிருந்தது..,

தவளையும் சில மீன்களும்
நீந்தி அசைவது கண்டு..,

கல்லெறிந்து விளையாடுகிறான்
மூன்று வயது மகன்.

குழந்தை படத்திற்கு
'லைக்' பட்டனை
அழுத்திய வண்ணம்..,

முகநூலில் மூழ்கி போயிருந்தார்
அந்த பையனின் அம்மா..!

--- செல் வா கவி, மத்துகமை

மடிக்கொள்ளா நட்சத்திரங்களோடு
மட்டற்ற பாசம் நுகர்ந்து வைத்திருந்த
பாட்டியின் நிறப்பிரிகை சேலையில் கிழமேற்காக
ஆகாயத்தொட்டில் அமைத்து ஆடுகிறேன்.
ஆடிய அலுப்பில்
நித்திரையழைக்க நிலாச்சாரலில் மேகப்பொதியில்
கண்ணயர்கிறேன். பின் வந்த
தூக்கம் கலைந்த நாட்களில்
பொற்காலணியொன்றைக் கைபிடித்தபடி
புரவியேறி வரும் இராஜகுமாரனுக்காய்
காத்திருக்கத் தொடங்கினேன்...

--- அகராதி

சாத்தியக் கூறு
-----------------

ஒரு நட்சத்திரத்திற்கும்
மறு நட்சத்திரத்திற்கும்
இடையேயான தூரமென்பது
ஒரு தீக்குச்சியில் பாதி

அந்தியில் மறையும்
கதிரவனின் அளவானது
இரு விரல்களின் இடுக்குக்குள்

நீண்டு நெளிந்த
இருப்புப்பாதையின் தூரமானது
ஒரு அளவுகோலின் அங்குலத்தில்

தலைக்குமேலிருக்கும்
வானத்தை தொட
தொலைதூர மலையின் உச்சியே
போதுமானதாய் இருக்கிறது.

--- கோ. (சாமானியன்)

இயல் குட்டி
-------------

மழையென்று வந்துவிட்டால்
காகிதங்களை கப்பலாக்கி விடுக்கிறாள்
இயல் குட்டி

மழை நீர் ஓடுகையில்
அவளிடும் கப்பல்களில்
விழுந்து தெறிக்கும் மழை துளிகளால்
தன் இயல்பு நிலையை
இழந்து கவிழ்ந்து
மெல்ல நீருக்குள்
பயணிக்கையில்

தன் முகமெங்கும்
சோகத்தை நிரப்பி
கண்களில் நீர் ததும்ப
பெருமழை ஒன்றுக்கு
தயராகிறாள் இயல் குட்டி...

--- பாரதி நீரு

மனசாட்சி என்னும் நான்
----------------------------

மனசாட்சி என்னும் நான்
நிழல் கூட இல்லாத
உன்னில் இன்னொரு
வண்ணப்பிரதி மட்டுமன்று
எண்ணப்பிரதியும் தான்

நீ யாரை எதிர்த்தாலும்
எதிரி உருக்குலையலாம் ஆனால்
என்னை எதிர்த்து உன்
உரு மட்டுமல்ல, உள்ளம் குலையும்
தூக்கமும் தொலையும்

வாழவும் சாகவும் விடாது
துரத்தும் துரோகங்களுக்கு
நானொரு நடமாடும் நீதிமன்றம்
என்னை ஏமாற்றியவர்
தன்னையே ஏமாற்றியவர்

குற்றங்கடிதலுக்கு நானோர்
ஊதியமில்லா ஆசிரியர்
குற்றங்கள் குறைந்ததற்கு
என்மீதான பயமே பிரதானம்
என்சொல்லே தீர்ப்பாகும் நீதிமன்றத்தில்...

--- து_பிரேம்குமார்

கோவில் பிரசாதத்தால்
தினம் ஒரு வேளை
வயிற்றை நிரப்பியவன்
நகரமத்தியில்
வாகனங்களின் தாறுமாறுகளுக்கு இடையே
வீதியைக் கடக்க முயன்ற
பார்வை இழந்தவரை
பாதுகாப்பாய் அழைத்து
அக்கரை சேர்ப்பதற்குள்
பெருஞ்சிரமங் கடந்து
சேர்த்தபின் கோவிலுக்குச் சென்றபோது
அன்றைய பிரசாதம்
காக்கைகளுக்கு உணவாகி
இருந்தது.

--- அகத்தின் அழகு (ரெஜினா குணநாயகம்)

தெய்வங்கள்~எப்பொழுதும்
நிலையான ஓர் இடத்தில்
நிலைத்து இருப்பதில்லை,

அவதரித்த இடத்தில்
பதினெட்டு வருடம்,
ஆளுமை செய்யுமிடத்தில்
ஐம்பது வருடம்,
அறுபதுக்குமேல்
முதியோர் இல்லங்களில்,
என்பதுக்குமேல்
மின் மயானங்களில்
ஜோதியோடு கலந்துவிடுகின்றன

தெய்வங்கள்~எப்பொழுதும்
நிலையான ஓர் இடத்தில்
நிலைத்து இருப்பதில்லை!

--- நாகை ஆசைத்தம்பி

கல்லறைப்பூவின் கண்ணீர்த்துளி
---------------------------------

குழந்தையொன்று பிறக்கவில்லை என்றே நாளும்
----குறுகியுள்ளம் ஏளனத்தில் துடிக்கும் பெண்ணை
வழக்கமாக மாமியாரும் சொல்லால் குத்தி
----வடுதன்னை மேன்மேலும் புண்ணாய் செய்தாள்
பழகிவந்த சுற்றத்தார் அக்கம் பக்கம்
-----பார்வையிலே எரிசொற்கள் பாய்ச்சிச் சென்றார்
அழகியெனப் புகழ்ந்தன்பால் அணைத்த கணவன்
-----ஆறுதலும் சொல்லாமல் பார்த்து நின்றான்!

மருத்துவம்தாம் வளர்ந்துள்ள இந்த நாளில்
----மகப்பேறு குறையறியும் வழியி னாலே
அருங்குழந்தை உருவாக்கும் தகுதி என்னும்
----ஆண்மையில்லை எனும்உண்மை அறிந்தி ருந்தும்
பெரும்பான்மை ஆண்களிங்கே மனைவி மீதே
----பெரும்பழியைச் சுமத்துகின்ற அவலத் தாலே
பெருமைமிகு தாய்மைக்குத் தகுதி பெற்றும்
----பெண்ணவளோ வாயில்லா பூச்சி யானாள்!

ஆண்மகனைத் தூற்றாது பெண்ணை மட்டும்
----அழவைத்துப் பார்க்கின்ற சமுதா யத்தால்
மாண்டபின்பு என்னுடலை எரித்தி டாதீர்
----மண்ணுக்குள் புதையுங்கள் அப்போ தேனும்
தீண்டியென்றன் வயிற்றக்குள் புழுவும் பூச்சி
----திரிந்துபழி மலடிச்சொல் நீங்கும் என்றே
மாண்பான தன்னுயிரை மாய்த்துக் கொண்ட
----மங்கையவள் கண்ணீரைத் துடைக்க வாரீர் !

--- பாவலர் கருமலைத்தமிழாழன்